பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 67

சனிக்கிழமை
01 பெப்ரவரி 2025

தை 19 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

**யாழில் கடவுச்சீட்டு அலுவலகம்** » 02

# திஸ்ஸ விகாரைக்கு தீர்வு என்ன?

## ஜனாதிபதியிடம் கஜேந்திரகுமார் எம்.பி. கேள்வி

**யாழ்ப்பாணம், பெப்ரவரி. 1**

**ஜனாதிபதி கூறிக்கொள்ளும் மாற்றத்தில், வடக்கு மக்களும் இணையவேண்டும் என்றால், தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு நடவடிக்கை எடுக்க முடியுமா? என்று நடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் கேள்வி எழுப்பியுள்ளார்.** 15

## திஸ்ஸ விகாரை அகற்றப்படாது!

### குறுக்கே பாய்ந்து ஆளுநர் குத்துக்கரணம்

யாழ்ப்பாணம், பெப். 1
தையிட்டி திஸ்ஸ விகாரை அகற்றப்படாது. அந்த விகாரையை அகற்றாமல் பிரச்சினைக்குத் தீர்வுகாண மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார். 15



## பெருந்தலைவர் மாவைக்கு ஜனாதிபதி அநுர அஞ்சலி

யாழ்ப்பாணம், பெப். 1
யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு நேரில் அஞ்சலி செலுத் 15

## வடக்கில் மிகவிரைவில் கைத்தொழில் பேட்டை!

யாழ்ப்பாணம், பெப். 1
காங்கேசன்துறை, மாங்குளம், பரந்தன் ஆகிய பகுதிகளில் விரைவில் கைத்தொழில் பேட்டைகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார். 15

## பொலிஸ் வேலைவாய்ப்பில் தமிழர்களுக்கு முன்னுரிமை

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 1
பொலிஸ் துறையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு, தமிழ் இளைஞர்களுக்கே கூடுதலான வாய்ப்பு வழங்கப்படும். எனவே, தமிழ் இளைஞர்கள் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தவேண்டும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் 15



## கேள்விக் கணைகளால் அதிகாரிகளுக்குக் கிடுக்குப்பிடி!

யாழ்ப்பாணம், பெப். 1
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்துக்கு வருகைதரும்போதே சில பிரச்சினைகள் தொடர்பில் அறிந்தும், அது தொடர்பில் தயார்ப்படுத்திக் கொண்டும் வருகைதந்தார்.
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கசிப்புக் காய்ச்சுபவர்கள் தொடர்பான 15

## அரசியற்கைதிகளுக்கு தெளிவான பதிலில்லை

### மழுப்பினார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், பெப். 1
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அரசியற்கைதிகளின் விடுதலை தொடர்பில் தெளிவான பதிலை வழங்காமல் மழுப்பிவிட்டுச் சென்றுள்ளார்.
யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் வைத்து, நீண்டகாலமாக சிறைகளில் தடுக்கப் 15

## அநுரவின் வருகையால் அதியுச்சப் பாதுகாப்பு!

யாழ்ப்பாணம், பெப். 1
ஜனாதிபதி அநுரவின் வருகையை முன்னிட்டு, யாழ்ப்பாணத்தில் நேற்று உச்சகட்டப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.
யாழ்ப்பாணம் 15

## பொய்! பொய்!! பொய்!!!

யாழ்ப்பாணம், பெப். 1
சாவகச்சேரி மருத்துவமனையின் விவகாரம் தொடர்பில், ஜனாதிபதி அநுரவிடம் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நேற்றுத் தவறான தகவலை வழங்கினார்.
சாவகச்சேரியில் அண்மையில் மருத்துவர் ஒருவர் இடமாற்றம் பெற்றுச் சென்றார். அவர் 15



முச்சந்தி முரளி

'முந்தி ஷெல்லால அலைஞ்சம் இப்ப செல்பிக்கு அலையிறம் கண்டியளோ'

## காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தை கொச்சைப்படுத்திய அர்ச்சுனா எம்.பி.!

யாழ்ப்பாணம், பெப். 1
காணாமலாக்கப்பட்டோருக்காக இழப்பீடு வழங்கப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா நேற்றுக் கோரிக்கை விடுத்தார்.
யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் காணாமலாக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டபோதே, இந்தக் கோரிக்கையை நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா முன்வைத்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
2009ஆம் ஆண்டு முதல் காணாமலாக்கபட்டோரின் உறவுகள் வடக்கு கிழக்கு உள்ளிட்ட எட்டு மாவட்டங்களில் தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என நீதிகோரிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். 15

## அநுரவுடன் செல்பி; திரண்டனர் மக்கள்

யாழ்ப்பாணம், பெப். 1
ஜனாதிபதி அநுரவுடன் செல்பி எடுப்பதற்காக இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# யாழ்ப்பாணத்தில் விரைவில் கடவுச்சீட்டு அலுவலகம்

ஜனாதிபதி அறிவிப்பு

**யாழ்ப்பாணம், பெப்.1**

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடவுச்சீட்டு அலுவலகம் ஒன்றை திறப்பதற்காக ஜனாதிபதி அநுரமார திஸாநாயக்க உத்தியோகபூர்வமாக அனுமதி வழங்கியுள்ளார்.**

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் மாவட்டச் செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பங்கேற்புடன் நேற்று இடம்பெற்றது.

இதன்போது வடக்கு மாகாணத்தில் வவுனியா மாவட்டத்தில் மாத்திரமே கடவுச்சீட்டு அலுவலகம் காணப்படுகின்றது. அதிகளவான பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக மாவட்ட செயலகத்தில் கடவுச்சீட்டு அலுவலகம் ஒன்றைத் திறப்பதற்கான இயலுமை காணப்படுகின்றதா? என மாவட்டச் செயலரிடம் ஜனாதிபதி அநுரகுமார வினவினார்.

அதற்குப் பதிலளித்த மாவட்டச்செயலர் ம. பிரதீபன், மக்களின் தேவை கருதி எமது மாவட்டச் செயலகத்தின் ஒரு பகுதியில் கடவுச்சீட்டு அலுவலகத்தைத் திறப்பதற்கு நாம் புதிய இடத்தைத் தெரிவுசெய்து தருகின்றோம் எனத் தெரிவித்தார்.

அதற்கமைய யாழ்.மாவட்டச் செயலகத்தில் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் அமைக்கப்பட்ட வெளிநாட்டு அலுவலர்கள் பணியகத்தின் வளாகத்தில் கடவுச்சீட்டு அலுவலகம் ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டதுடன் ஜனாதிபதி அங்கு சென்றும் பார்வையிட்டார். (ச-26-125)

## இ. போ. சபைக்கு பெப்ரவரியில் ஆட்சேர்ப்பு

கொழும்பு, பெப்.1

இலங்கைப் போக்குவரத்து சபையில் நிலவும் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் பற்றாக்குறைக்குத் தீர்வாக பெப்ரவரி மாதத்தில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் மருத்துவர் பிரசன்ன குமார குணசேன தெரிவித்துள்ளார்.

பயணிகளுக்கு திறமையான சேவையை வழங்க எதிர்காலத்தில் 1,000 புதிய வசதியான பேருந்துகள் சேர்க்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார். (ச-இ)


## கொழும்பு துறைமுகத்தில் திடீர் தீவிபத்து

கொழும்பு, பெப்.1

கொழும்புத் துறைமுக பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பண்டாரநாயக்க கொள்கலன் களஞ்சியப் பகுதியில் திடீரென தீ விபத்து ஒன்று நேற்றுப் பதிவாகியுள்ளது.

சம்பவ இடத்துக்கு தீயணைப்புப் படையினர்,கடற்படையினர் மற்றும் துறைமுகப் பணியாளர்கள் விரைந்துசென்று தீயைக் கட்டுப்படுத்தினர்.

சீனாவில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட ஒயில் பில்டர் மற்றும் இரசாயன பொருள்கள் கொண்டுவரப்பட்ட கொள்கலன் ஒன்றில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. (ச-இ)



## உள்ளூராட்சிசபைத் தேர்தலில் சங்கமிக்கும் ரணில் - சஜித்

கொழும்பு, பெப். 1

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பன ஒன்றிணைந்து போட்டியிடவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தை சாதகமாக நடைபெறுகின்றது. ஒன்றாக நாம் தேர்தலில் களமிறங்குவோம். சின்னம் தொடர்பில் இன்னும் முடிவு இல்லை. சிறிகொத்தவா அல்லது ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகமா என்பது முக்கியமல்ல. இரு தரப்பு இணைவு என்பது தான் முக்கியம். இரு தரப்பும் இணைவதற்குரிய சாத்தியம் பிரகாசமாகவே உள்ளது. அரசியலில் நிரந்தர எதிரியும் இல்லை, நண்பரும் இல்லை. இணைவு குறித்து சஜித், ரணில் ஆகியோர் சாதகமான நிலைப்பாட்டில் உள்ளனர். இருவரும் விரைவில் சந்திப்பார்கள் என்றும் குறிப்பிட்டார். (ச-இ)

## அரச சேவையிலிருந்து ஓய்வுபெறும் குயின்ரஸ்

யாழ்ப்பாணம், பெப்.1

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் திருஞானம் ஜோன் குயின்ரஸ் அரச சேவையில் இருந்து நேற்றுமுதல் ஓய்வு பெற்றுள்ளார்.

ஆசிரியராகச் சேவையை ஆரம்பித்த ஜோன் குயின்ரஸ் 2013 ஆம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் ஒன்று அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்று வடமாகாணக் கல்வி அபிவிருத்தி, திட்டமிடல், நிர்வாகம் ஆகியவற்றின் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராகப் பதவிவகித்தார்.

2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் வடமாகாணத்தின் ஐந்தாவது மாகாணக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றார். இவர் கடந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிவிசேட தரத்துக்கு முதன்முறையாக ஒரு தமிழராகத் தேசிய பொதுச் சேவை ஆணைக்குழுவால் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். கடந்த வருடம் ஜூலை மாதம் 5 ஆம் திகதி முதல் இவர் மத்திய கல்வி அமைச்சின் கல்வி வெளியீட்டுப் பிரிவின் ஆணையாளர் நாயகமாகப் பதவி உயர்வு பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-66)

# தலைவர்களை ஒன்றிணைத்த போராளி மாவை சேனாதிராஜா

சி.வி.கே.சிவஞானம் இரங்கல்

தமிழ்தேசிய இனத்தின் தலைவர்களை ஒன்றிணைத்த ஒரு போராளி மாவை சேனாதிராஜா என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

மாவை சேனாதிராஜாவின் உடலுக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

மாவை சேனாதிராஜாவின் இழப்பு என்பது இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழ்த்தேசிய இனத்துக்குமான இழப்பாகும். மக்களுக்காக தனது வாழ்க்கையில் பல தியாகங்களையும், அர்ப்பணிப்புக்களையும் செய்த ஒருவர் மாவை சேனாதிராஜா. தமிழரசுக் கட்சி சார்ந்து எல்லா வேறுபாடுகளையும் மறந்து அவருடைய நினைவாக பிளவுகள் பிரிவுகள் இன்றி ஒற்றுமையாக முன்செல்லவேண்டும். அவர் வஞ்சகம் இல்லாத உள்ளத்தைக் கொண்டவர். அவருடைய ஆத்மா சாந்தியடையவேண்டும் - என்றார். (எ-125,20)

சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| 31.01.2025 | வெள்ளிக்கிழமை | 0441 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|
| C | 8 7 4 7 8 2 |

Super Ball DLB

| திகதி | தினம் |
|---|---|
| 31.01.2025 | வெள்ளிக்கிழமை |

| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|
| 2707 | U | 20 43 69 70 |

சனிதா DLB

| திகதி | தினம் |
|---|---|
| 31.01.2025 | வெள்ளிக்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| Y | 02 31 44 69 | 4868 |

SASIRI DLB

| திகதி | தினம் |
|---|---|
| 31.01.2025 | வெள்ளிக்கிழமை |

| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|
| 0612 | 16 36 47 |

லக்ன ராசி

| திகதி | தினம் |
|---|---|
| 31.01.2025 | வெள்ளிக்கிழமை |

| விருச்சிகம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|
| | 02 40 48 56 | 4419 |

KAPRUKA DLB

| திகதி | தினம் |
|---|---|
| 31.01.2025 | வெள்ளிக்கிழமை |

| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|
| J | 28 | 25 40 46 59 | 1883 |

அத கோடிபதி DLB

| திகதி | தினம் |
|---|---|
| 31.01.2025 | வெள்ளிக்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| C | 05 09 18 45 | 2533 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 200க்கும் மேற்பட்ட குழந்தைகள் கடந்தாண்டில் உயிர்மாய்ப்பு

*சமூக ஊடகங்களின் தாக்கமென மருத்துவர்கள் எச்சரிக்கை*

**கொழும்பு, பெப்.1**

**கடந்த ஆண்டில் 200க்கும் மேற்பட்ட குழந்தைகள் தவறான முடிவெடுத்து உயிரிழந்த சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக இலங்கை சிவில் மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. சிறுவர் தற்கொலைகள் அதிகரிப்பதற்கு சமூக ஊடகங்களின் பயன்பாடே வழிவகுத்துள்ளதாகவும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.**

அதிகாரபூர்வமற்ற தரவுகளின்படி, 2022 ஆம் ஆண்டில், 18 வயதுக்குட்பட்ட 133 சிறுவர்கள் உயிர்மாய்த்துள்ளனர். கடந்த ஆண்டு 270 சிறுவர்கள் உயிர்மாய்த்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சில சிறுவர்களின் அசாதாரண செயற்பாட்டுக்கு இந்தச் சமூக ஊடகப் பாவனையே வழிவகுக்கின்றது. எனவே இலங்கையிலும் சமூக ஊடகங்களை சிறுவர்கள் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்தவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)




**அ**ற்பனுக்கு மட்டுமில்லை அநுரவுக்குப் பவிசு வந்தாலும் அர்த்தராத்திரியிலதான் குடைபிடிப்பார். அநுரவைப் பற்றி சனத்துக்கு முதல் இருந்த விம்பமெல்லாம் இப்ப ஒவ்வொண்டா உடைஞ்சுகொண்டிருக்குது. ஜனாதிபதியா வரமுதலே அவருக்கிருந்த அடையாளமே எளிமைதான். ஒரு டபிள் பொக்கெற் உள்ள 'செக்' சேர்ட்டும் ஜீன்ஸும் போட்டுக்கொண்டுதான் எல்லா இடமும் போய்வந்தவர். எலக்சன் பிரசாரத்துக்கும் அதுதான் உடுப்பு. அதோட தன்ர பாதுகாப்புக்கும் தங்கட கட்சிக்காரர் நாலைஞ்சு பேரைத்தான் கூட்டிக்கொண்டுபோவார். ஆனால் இப்ப எல்லாமே தலைகீழாப் போட்டுது. இப்ப ஒவ்வொருநாளும் ஒவ்வொரு கலரில உள்ள பளபளக்கிற 'நஷனல்' சேர்ட் இல்லாமலும், அம்பது அறுபது ஆமி, பொலிஸ் இல்லாமலும் அவர் வெளியில தலைகாட்டுறதே இல்லை.

முந்தி அவர் சாதாரண எம்.பி. இப்ப ஜனாதிபதியானவுடன இப்பிடிக் கடும் பாதுகாப்போடதானே திரியவேணும்? எண்டு ஆரும் முட்டுக்குடுக்க நினைப்பியள். ஆனால் இதே அநுர ஜனாதிபதியா வெண்டபிறகும் வவுனியாவுக்கும், யாழ்ப்பாணத்துக்கும் தனிக்காரில வந்திட்டுத்தானே போனவர். அப்பகூட அவருக்கு இவ்வளவு பாதுகாப்பில்லையே. நாலைஞ்சு மெய்ப்பாதுகாவலர்களோடதான் அவரின்ர அந்தப் பயணம் இருந்தது. ஆனால் யாழ்ப்பாணம் கச்சேரியில நேற்று நடந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்துக்கு வந்த அநுரவுக்கு எத்தினை அடுக்குப் பாதுகாப்பெண்டே எண்ணேலாத அளவுக்கு கடும் பாதுகாப்பு. அந்த மீட்டிங்குக்கு போனவைக்கும் இதுவரைக்கும் இல்லாத அளவுக்கு 'செக்கிங்'. மஹிந்த, ரணில் வரேக்ககூட இப்பிடி செக்கிங் நடக்கிறேலை எண்டு அந்தக்கூட்டத்துக்குப் போனவை புறுபுறுத்ததையும் கேக்கமுடிஞ்சுது.

பாதுகாப்பு விசயத்திலையும், உடுப்பு விசயத்திலையும் ஆள் தலைகீழா மாறினாலும், அதிகாரிமாரைக் கேள்விகேட்டு மடக்கிறதிலையும், இஞ்சையுள்ள ஆக்களுக்கே தெரியாத பிரச்சினையளை எடுத்துக்கொண்டந்து பேசுறதிலையும் இன்னும் அநுர மாறேலை. கச்சாயில மண் அகழ்வு ஏன் இப்பவும் நடக்குது? நெல்லியடியில ரெலிக்கொம் வயர் வெட்டுப்படுகுது எண்டு தெரியுமோ ? தொண்டைமானாறு தொடக்கம் அச்சுவேலி வரைக்கும் ஏன் இன்னும் றோட் போடுப்படேலை? நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறையில கசிப்பு, கஞ்சா, போதைப்பொருள் எல்லாம் கூடிட்டுது. இதை ஏன் அந்தந்தப் பகுதி பொலிஸ்காரர் கட்டுப்படுத்தேலை? அவையும் லஞ்சம் வாங்குகினமோ?எண்டு அநுர கேக்கக் கேக்க அதிகாரிமாருக்கு என்ன சொல்லுறதெண்டே தெரியாமல் போட்டுது. எல்லாரும் ஆளையாள் பார்த்து 'உந்தாளுக்கு எப்பிடி உதெல்லாம் தெரியுது? எங்களுக்கே இதுகள் தெரியாதே' எண்டு முழுசிக்கொண்டிருந்தவையாம். களத்தில இறங்கி வேலை செய்யாட்டி இப்பிடி மேலிடத்துக்கு முன்னால முழுசிறதைத் தவிர வேற என்னதான் அவையும் செய்யேலும்?

padsi@uthayan.com - பட்சி



## கஞ்சா கடத்தல் சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம், பெப்.1

கௌதாரிமுனையில் கைப்பற்றப்பட்ட 87 கிலோ கஞ்சாவுடன் தொடர்புடைய சந்தேகநபர் கிளிநொச்சியில் வைத்து இரு மாதங்களின் பின்னர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இரு மாதங்களுக்கு முன்னர் கௌதாரிமுனையில் 87 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டிருந்தது. கஞ்சாவை வாகனத்தில் கொண்டுசென்றவர் தப்பிச்சென்று தலைமறைவாகியிருந்தார். சந்தேகநபரைத் தேடும் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்த பூநகரிப் பொலிஸார், கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் சந்தேகநபரைக் கிளிநொச்சியில் வைத்துக் கைதுசெய்துள்ளனர். (எ125)



## உழவு இயந்திரத்துடன் விபத்து: இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, பெப்.1

நெல்லேற்றி வந்த உழவு இயந்திரமும் மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு, சுதந்திரபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 36 வயதுடைய குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

விபத்தை ஏற்படுத்திவிட்டு உழவு இயந்திரத்துடன் சாரதி தப்பிச்சென்ற நிலையில் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச- 25.9

## தூசுதட்டப்படும் 11 வழக்குகள்

கொழும்பு, பெப்.1

கடந்த அரசாங்கங்களின் காலத்தில் நடைபெற்ற மோசடி, சட்டவிரோதச் சொத்துக்குவிப்பு விடயங்களுடன் தொடர்புடைய 11 வழக்குகள் தற்போதைக்குத் தூசு தட்டப்பட்டுள்ளதாக அறியக்கிடைத்துள்ளது.

இதன்படி முன்பு நடைபெற்ற ஊழல், மோசடி மற்றும் சட்டவிரோதச் சொத்துக் குவிப்பு போன்ற விடயங்கள் தொடர்பில் வழக்குகள் பதியப்பட்டு, பின்னர் விசாரணைகள் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வழக்குகளையே மீண்டும் முன்னெடுக்கத் தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## ரயிலில் மோதுண்டு பொலிஸ் காயம்

யாழ்ப்பாணம், பெப்.1

வவுனியாவில் புகையிரதத்துடன் மோதுண்டு போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று ஈரப்பெரியகுளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, அவுசதப்பிட்டியப் பகுதியிலுள்ள ரயில் கடவையில் மோட்டார் சைக்கிளில் அவர் கடக்க முற்பட்ட போதே யாழ்ப்பாணத்திலிருந்து வந்த ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார். காயமடைந்த பொலிஸ் அலுவலர் வவுனியா பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். (ச-110)

## 17 இந்தியமீனவர்கள்தொடர் விளக்கமறியல்

மன்னார், பெப்.1

தலைமன்னார் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 17 இந்திய மீனவர்களையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிவான் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளார். குறித்த மீனவர்கள் கடந்த டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை தலைமன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்டிருந்தனர். குறித்த மீனவர்களின் வழக்கு நேற்று வெள்ளிக்கிழமை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போதே எதிர்வரும் 7 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (ச-58)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய

**மேடம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் மகிழ்ச்சி ஏற்படும். சுப நிகழ்ச்சிக்கான பேச்சு முடியும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும். எதிரிகள் வகையில் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். அரசாங்கக்காரியங்கள் அனுகூலமாக முடியும். பிரமுகர்களின் தொடர்பும், அதனால் அனுகூலமும் உண்டாகும்.

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும். திடீர்ப் பயணம் ஒன்றை மேற்கொள்ள நேரிடும்.

**கடகம்:** காரியம் இழுபறியாக முடியும். அதிகாரிகளின் சந்திப்பும் அதனால் சில பிரச் சினைகளும் அலுவலகத்தில் ஏற்படக்கூடும். புதிய முயற்சியை காலையிலேயே தொடங்குவது நல்லது. போட்டிகளைச் சமாளிக்க வேண்டி வரும்.

**சிம்மம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்குத் தாய்மாமன் வழியில் ஆதாயம் உண்டாகும்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும். மனதில் அடிக்கடி குழப்பம் ஏற்படக்கூடும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். தந்தை வழி உறவினர்களுக்காகச் செலவு செய்யவேண்டி வரும். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த பணம் வந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். இனம் தெரியாத குழப்பம் ஏற்பட்டு நீங்கும். பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். அலுவலகப் பணிகளில் சக ஊழியர்கள் உதவி செய்வார்கள்.. வியாபாரத்தில் லாபம் கூடுதலாகக் கிடைக்கும். காரியங்கள் முடிவதில் இழுபறி நிலை மாறும்.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும். ஆதாயம் ஏற்படும்.

**கும்பம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மன உறுதியுடன் முடிவெடுத்துச் செயற்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் சென்று குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். புதிய முயற்சியைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், வார்த்தைகளில் நிதானம் தேவை.



'கிளின் சிறிலங்கா' செயற்றிட்டத்தின் கீழ் சாவகச்சேரிப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட வீதிகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சிரமதானம் செய்யப்பட்டன. தென்மராட்சிப் பிரதேச செயலகம், சாவகச்சேரிப் பொலிஸார், இராணுவத்தினர், இளைஞர் கழகத்தினர், அஞ்சல் அலுவலகத்தினர், நகரசபை ஊழியர்கள், பொதுமக்கள் ஆகியோர் இணைந்து சிரமதானத்தில் ஈடுபட்டனர். (ச-25, 28,9)



நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் திருமதி ஸ்ரீரதி முருகஜோதி தலைமையில் பாடசாலை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ச-25,17)

## பஸ்ஸில் கசிப்புக் கடத்தல் சந்தேகநபர் சிக்கினார்!

யாழ்ப்பாணம், பெப். 1

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தனியார் பேருந்தில் பயணப்பொதியில் மறைத்து கசிப்பை எடுத்துச் சென்ற சந்தேகநபர் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

பேருந்தில் துர்நாற்றம் வீசியதையடுத்து பொதுமக்கள் குறித்த பயணப்பொதியைச் சோதனையிட்டபோது கசிப்பை மறைத்து எடுத்துச்சென்றமை கண்டறியப்பட்டது.

அதனையடுத்து சந்தேகநபரை பொதுமக்கள் பரந்தன் பகுதியில் நின்றிருந்த வீதிப்போக்குவரத்து பொலிஸாரிடம் ஒப்படைத்த நிலையில் அவர்கள் சந்தேகநபரை சான்றுப்பொருளுடன் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-இ)



## முதிரை மரங்கள் தறிப்பு மேல்வெடிவைத்து இருவர் கைது

முல்லைத்தீவு, பெப். 1

முல்லைத்தீவு உடையார்கட்டு - கல்லாறு ஒதுக்கக்காட்டினுள் சட்டவிரோதமான முறையில் உள்நுழைந்து முதிரை மரக்குற்றிகளை இயந்திர வாள் கொண்டு வெட்டித் துண்டுகளாக்கி உழவு இயந்திரங்களில் கடத்திச்செல்ல முயன்ற இருவரை மேல்வெடி வைத்து வனவளத் திணைக்களத்தினர் கடந்த புதன்கிழமை கைதுசெய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (ச-125)

இணுவில் பொதுநூலக சிறுவர் திறன் விருத்தி மையத்தின் கலைவிழா அண்மையில் இணுவில் பொதுநூலக கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வித் திணைக்கள முன்பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் த.முகுந்தன் பங்கேற்றார். (ச)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

இனிமையான பேச்சும் ஒரு விதத்தில் தர்மம் தான்.


–நபிகள் நாயகம்–

# இளவயதுக் குற்றவாளிகள் என்னும் அபாயம்

வழிப்பறிக்கொள்ளைகள் உள்ளிட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவனொருவனுக்கு புனர்வாழ்வு வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்ட செய்தி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பொதுவாகத் தமிழர் தாயகத்தில் இப்படி இளம்வயதில் அதுவும் பாடசாலை மாணவர்கள் குற்றச்செயல்களில் ஈடுபடுவது அரிதிலும் அரிது. அவ்வாறு குற்றங்களில் தொடர்புபட்டிருந்தாலும், அது தற்செயலான ஒன்றாகவே இருக்கும். அவர்கள் தொடர்ச்சியாக, திட்டமிடப்பட்ட குற்றங்களைச் செய்வது இல்லை. ஆனால் இந்த மாணவனோ திட்டமிட்டு, தொடர்ச்சியாக குற்றங்களைப் புரிந்திருக்கிறார். அவை உறுதிப்படுத்தப்பட்டதாலேயே, வயதையும், மாணவன் என்பதையும் கருத்திற்கொண்டு தண்டிக்கப்படாமல் புனர்வாழ்வுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறார். இந்த மாணவனின் குற்றச்செயல்கள், இங்கும் இளவயதுக் குற்றவாளிகள் உற்பத்தியாகத் தொடங்கிவிட்டார்கள் என்ற அபாயச் செய்தியையே சொல்லிநிற்கின்றது. இந்த மாணவன் ஒருபானை சோற்றுக்கு ஒருசோறு பதம் போன்ற உதாரணமே. இதேபோன்று பல இளவயதுக் குற்றவாளிகள் தோன்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் கண்முன்னே நிதமும் கண்டுகொண்டிருக்கிறோம்.

இளவயதுக் குற்றவாளிகள் என்பது உலகளாவிய ஒரு முக்கியமான பிரச்சினையாகும். இளம் வயதில் குற்றங்கள் செய்யும் இளைஞர்கள் பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் உளவியல் காரணிகளால் பாதிக்கப்பட்டவர்களே. நல்லவேளையாக இதுநாள்வரை, இப்படி இளவயதுக் குற்றவாளிகள் இல்லாத நாடாக நாமிருந்தோம். ஆனால் இப்போது அந்த அபாயமும் நம் வாசற்கதவைத் தட்டத் தொடங்கியிருக்கிறது. வறுமை, கல்வியின்மை, தீய நண்பர்களின் தொடர்பு, மன அழுத்தம், கோபம் மற்றும் உணர்ச்சி சமநிலையின்மை, குழந்தைப் பருவத்தில் ஏற்பட்ட உளவியல் பாதிப்புகள், வன்முறை மற்றும் குற்றம் சார்ந்த விளையாட்டுகள், திரைப்படங்கள் மற்றும் இணையங்களில் உள்ள இளவயதுக் குற்றங்களை ஊக்குவிக்கும் காட்சிகள் என்பனவே இந்த இளவயதுக் குற்றவாளிகளை உற்பத்தி செய்வதில் முதன்மைக் காரணிகளாக இருக்கின்றன. போரால் உளவளம் மோசமாகச் சிதைவடைந்து போயிருந்த காலத்தில்கூட இப்படி இளவயதுக் குற்றவாளிகள் தோன்றியிருக்கவில்லை. ஆனால் இப்போது போர் முடிவுக்கு வந்து 15 வருடங்களின் பின்னர் அப்படி இளவயதினரிடையே, அதுவும் பாடசாலை மாணவர்கள்கூட குற்றவாளிகளாக மாறிக்கொண்டிருக்கிறார்கள் என்றால், அதன் பின்னணியில் போரால் ஏற்பட்ட உளவடுவைத் தவிர்ந்த வேறு காரணிகளின் செல்வாக்கே அதிகம்.

குறிப்பாக இப்போது பாடசாலை மாணவர்களிடம்கூட , செல்போன்கள் சகஜமாகப் புழக்கத்துக்கு வந்துவிட்டன. பெற்றோர் தம் பிள்ளைகளின் பாதுகாப்புக்காகவும், அவர்களோடு நினைத்த மாத்திரத்தில் தொடர்பை ஏற்படுத்தவுமே இந்தச் செல்போனை மாணவர்களிடம் வழங்குகின்றனர். ஆனால் மாணவர்களோ அந்தச் செல்போன்களுக்குள்ளேயே இணைய விளையாட்டுகள், திரைப்படங்கள், சமூக வலைத்தளங்கள் என்று மூழ்கிவிடுகின்றனர். இதனால் அவர்கள் வெளியுலக வாழ்வை மறந்து, செல்போன் தரும் மாய உலகையும், அதன் மூலம் உட்புகுத்தப்படும் விடயங்களையும் உண்மையென்று நம்பத் தொடங்கிவிடுகின்றனர். இப்போதைய நவீன உலகில், எல்லாச் சமூக ஊடகங்களும் பணத்துக்காக, விஷக்கருத்துகளையே அதிகம் திணிப்பனவாக உள்ளன. அந்த விஷவித்துகள் பெரியவர்களை விடவும், சிறுவர்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றி, அவர்களை வன்முறையாளர்களாகவும்,இளவயதுக் குற்றவாளிகளாகவும் மாற்றுகின்றது. அத்தோடு கஞ்சா, ஹெரோய்ன், மது , புகைத்தல் என்பன மிகச் சாதாரணமானவை போன்று நமது சமூகத்தில் இயல்பாக்கம் அடைந்தமையும் இளவயதுக் குற்றவாளிகளின் உருவாக்கத்துக்கு இன்னொரு காரணமெனலாம். எனவே, இந்த இளவயதுக் குற்றவாளிகளின் உருவாக்கத்துக்கு பெற்றோரும், சமூகமுமே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும். முறித்து வளர்க்காத முருங்கையும், தவறான பாதையில் செல்லும்போது அடித்து வளர்க்காத குழந்தையும் உருப்படுவதில்லை. எனவே சிறுவயது முதலே இளையோருக்கு நல்வழியைக் காட்டுவதையும், அவர்களைக் குற்றப்பாதையில் திசைதிருப்ப முயலும் விடயங்களில் இருந்து தூர வைத்திருப்பதையும் பெற்றோரும், சமூகமும் உறுதிப்படுத்தினால் இந்த இளவயதுக் குற்றவாளிகள் என்னும் அபாயம் பெருகாமல் தடுக்கமுடியும்.




# பிரதேச செயலகப் பிரிவூடாக ஜனாதிபதி நிதி விநியோகம்



**கொழும்பு, பெப். 1**
**ஜனாதிபதி நிதியத்தால் ஒதுக்கப்படும் பணம் இலங்கையிலுள்ள 341 பிரதேச செயலர் பிரிவுகள் ஊடாக விநியோகிக்கப் படவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.**

இதுவரை காலமும் இந்த நிதி ஜனாதிபதி செயலகத்தினாலேயே விநியோகிப்பட்டுவந்தது. இனிமேல் பிரதேச செயலர் பிரிவுகள் ஊடாகவிநியோகிக்கப்படவுள்ளது. இதற்கென பிரதேச செயலகங்களில் தனியான பிரிவு அமைக்கப்படும் அவர்கள் மக்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று கொழும்புக்கு அனுப்புவார்கள். விண்ணப்பதாரிகளுக்குப் பணம் நேரடியாக அனுப்பப்படும். ஐந்துபிரதேசசெயலகங்களில்முதற்கட்டமாக இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சிறுநீரக.புற்றுநோய் சிகிச்சை போன்றவற்றுக்கு உதவி கோருவோர் பிரதேச செயலகங்களில் உருவாக்கப்படவுள்ள ஜனாதிபதிப் பிரிவின் ஊடாக தமது விண்ணப்பங்களை அனுப்பலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-22.6)



# காலியில் துப்பாக்கிச்சூடு மூவர் பலி

கொழும்பு, பெப்.1
காலி, ஹினிதும பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் மூவர் உயிரிழந்துள்ளனர். மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டிலேயே மூவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.
சம்பவத்துக்கான காரணம் இன்னும் வெளியாகவில்லை என்றும் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# சுதந்திரதின நிகழ்வை மக்கள் பார்க்கலாம்

கொழும்பு, பெப். 1
சுதந்திரதினம் யாருக்கு என்ற கேள்வி கடந்த காலங்களில் இருந்தது. ஆனால் இது மக்களுக்கானது. சுதந்திர தின நிகழ்வைப் பார்வையிடுவதற்கு பொதுமக்களுக்கு கூடுதல் வாய்ப்பு வழங்கப்படும் என்று பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளாட்சி அமைச்சர் (கலாநிதி) ஏ.எச்.எம்.எச். அபயரத்ன தெரிவித்துள்ளார். தேசிய மறுமலர்ச்சிக்காக அணிதிரள்வோம் என்ற தொனிப்பொருளில் தான் 77 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் இம்முறை இடம்பெறவுள்ளன.
குறிப்பாக நாட்டுப் பொருளாதார நிலைமையையும் கருதி செலவுகள் இன்றி, மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலுமே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-22,44)

# பதவிவிலகல்

கொழும்பு, பெப்.1
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் என்.பி.எம். ரணதுங்க தனது பதவியிலிருந்து விலகியுள்ளார். கடந்த ஒக்ரோபர் 10 ஆம் திகதி குறித்த பதவிக்கு இவர் நியமிக்கப்பட்டிருந்தார். அவரது பதவிவிலகல் கடிதம் நேற்று விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக அவரது அலுவலகம் உறுதிப்படுத்தியுள்ளது. (ச-இ)

# ஆராய்ச்சிகளுக்கு அதிக நிதியொதுக்கீடு

கொழும்பு, பெப். 1
ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு வரவு - செலவுத்திட்டத்தில் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாக விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் கிரிஷாந்த அபேயசேன தெரிவித்துள்ளார்.
இலத்திரனியல்,தகவல் தொழில்நுட்பம்,விண்வெளி ஆராய்ச்சி, ரோபோ தொழில்நுட்பம் போன்றவற்றுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
பல்வேறு அரச கட்டமைப்புகள் ஊடாக பொருளாதார அபிவிருத்தியை நோக்கியதாக இந்தத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.
ஆராய்ச்சியாளர், தொழில்நுட்பவியலாளர் போன்ற வெற்றிடங்களுக்கு அரசியல் தலையீடுகள் எதுவுமின்றி பொருத்தமானவர்கள் நியமிக்கப்படுவார்கள். இதன்மூலம் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ச-22,6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஜனாதிபதி வருகையையொட்டி

# வேலையற்ற பட்டதாரிகள் கவனவீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப்.1

**யாழ்ப்பாணம் வருகைதந்துள்ள ஜனாதிபதியின் கவனத்தை ஈர்க்கும் முகமாக வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் நேற்று வெள்ளிக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகைதந்து யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் உள்ளிட் பல்வேறு பொதுக்கூட்டங்களில் பங்கேற்றார். யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நடைபெற்றபோது தமக்கான வேலை வாய்ப்புக் கோரி ஜனாதிபதியின் கவனத்தை ஈர்க்கும் முகமாக வடக்கு வேலையற்ற பட்டதாரிகள் யாழ்.மாவட்டச் செயலகத்துக்கு அருகில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதேவேளை ஜனாதிபதியின் யாழ்ப்பாண வருகையின்போது போராட்டம் நடத்துவதற்குத் தடை விதிக்கக் கோரி யாழ்ப்பாணம் பொலிஸார் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை நேற்றுமுன்தினம் நீதிமன்றம் நிராகரித்தமை குறிப்பிடத்தக்கது. (ச-66,20,27)

## வாள், பொல்லுகளால் தாக்கி

# வழிப்பறிக் கொள்ளை

*வவுனியாவில் இளைஞர்குழு அட்டகாசம்*

வவுனியா, பெப்.1

வவுனியா, கற்குழிப் பகுதியில் இளைஞர் குழுவொன்று வீதியால் சென்றவர்களை வழிமறித்து வாள், பொல்லுகளால் தாக்கிப் பணம் பறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு நடந்துள்ளது.

வவுனியா மகாவித்தியாலயம் முன்பாகவுள்ள வீதி மற்றும் கற்குழி செல்லும் வீதி என்பவற்றில் மதுபோதையில் வாள்கள், பொல்லுகளுடன் நின்ற இளைஞர் குழுவே வீதியால் சென்றவர்களை வழிமறித்து அவர்கள் மீது தாக்குதல் நடத்தி பணம் பறித்துள்ளது. இதன்போது இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கமான 107 க்கு அழைப்பு எடுத்து அறிவித்த போதும் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தரவில்லை என்றும் தாக்குதல் மேற்கொண்டவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டனர் என்றும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். (ச-110,18)



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மறைந்த மூத்ததலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள பிரதான சுற்றுவட்டப்பாதையில் நேற்று வெள்ளிக்கிழமை அஞ்சலி செலுத்தப்பட்டது. முல்லைத்தீவுப் பிரதேச இலங்கைத் தமிழரசுக் கட்சித் தொண்டர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து. ரவிகரன் பங்கேற்றிருந்தார். (ச-25, 246)

## உடுப்பிட்டி மதுசாலை வழக்கு ஒத்திவைப்பு!

யாழ்ப்பாணம், பெப். 1

உடுப்பிட்டி இமையாணன் மேற்கில் புதிதாகத் திறக்கப்பட்ட மதுபானசாலையை அகற்றக்கோரி உடுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த 32 பொது அமைப்புகளால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கு எதிர்வரும் மார்ச்மாதம் 6ஆம்திகதிக்குத் தவணையிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் நீதவான் பொன்னுத்துரை கிருசாந்தன் முன்னிலையில் கடந்த புதன்கிழமை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ச-100,66,27)



சாவகச்சேரி பிரதேசசபையும், சேவ் த லைப் நிறுவனமும் இணைந்து பொதுமக்கள் பங்களிப்புடன் 'க்ளீன் சிறிலங்கா' செயற்றிட்டத்தின் கீழ் சரசாலை குருவிக்காடு பகுதியை நேற்றுச் சுத்தம் செய்தன. (ச-28)



## விவசாய நவீனமயமாக்கல் விளைச்சல் கணிப்பு!

கிளிநொச்சி, பெப்.1

விவசாய நவீனமயமாக்கல் கிராமங்களை உருவாக்கும் முன்மாதிரிச் செயற்றிட்டத்தின் கீழ் கிளிநொச்சி மகிழங்காடு கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையின் விளைச்சலைக் கணிப்பீடு செய்யும் வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட புள்ளிவிபரவியலாளர் எஸ். ஜெயவிந்தனின் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட புள்ளிவிவர உத்தியோகத்தர்களால் இந்த அளவீட்டுப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (ச-113)

## யாழ்ப்பாணத்தில்

# பாதுகாப்பற்ற நிலையில் 33 ரயில் கடவைகள்

யாழ்ப்பாணம், பெப்.1

யாழ்ப்பாணத்தில் 33 பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகள் காணப்படுகின்றன என்று யாழ்ப்பாணம் மாவட்ட பதில் செயலர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நேற்று நடைபெற்றபோதே இதனைத் தெரிவித்தார்.

பிரதேச செயலகப் பிரிவுவாரியாக சாவகச்சேரியில் 14, நல்லூரில் 7, தெல்லிப்பழையில் 6, யாழ்ப்பாணத்தில் 3, உடுவிலில் 3 என 33 பாதுகாப்பற்ற புகையிரத கடவைகள் காணப்படுகின்றன. எனவே இந்தக் புகையிரதக் கடவைகளைப் பாதுகாப்பானதாக மாற்றியமைக்கவேண்டும். அத்துடன் யாழ்ப்பாணத்தில் நேரஅட்டவணைக்கு ஏற்ப 38 புதிய பேருந்துகள் தேவையாக உள்ளன. யாழ்ப்பாண சாலைக்கு 23 பேருந்துகளும், பருத்தித்துறை சாலைக்கு 10 பேருந்துகளும், காரைநகர் சாலைக்கு 5 பேருந்துகளும் தேவையாக உள்ளன. யாழ்ப்பாணத்தில் தற்போது வீதி விபத்துகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. யாழில் 6 வீதி சமிக்ஞை விளக்குகளே காணப்படுகின்றன. எனவே வீதி விபத்துகளைக் குறைக்க வீதி சமிக்ஞைகளை அமைக்கவேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-27-26-125)

## பெண்கள் கிரிக்கெட் போட்டிகள் நாளை


யாழ்ப்பாணம், பெப்.1

யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் பெண்களுக்கான கிரிக்கெட் போட்டிகள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

யுனிசெப் நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடன், " வளர்ச்சி மற்றும் சமாதானத்துக்கான விளையாட்டு" எனும் தொனிப்பொருளில் யாழ்.சமூகச்செயற்பாட்டு மையம் இந்தப் போட்டிகளை நடத்திவருகிறது.

அந்தவகையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த ஆர்வமுள்ள பெண்வீராங்கனைகள் போட்டிகளில் பங்குபற்றலாமென செயற்பாட்டு மையத்தின் பிரதம நிறைவேற்று அலுவலர் அறிவித்துள்ளார். (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சேவ் ஏ லைப்' நிறுவனத்தின் ஏற்பாட்டில், கடற்கரையைச் சுத்தம் செய்யும் முகாம் பருத்தித்துறையில் அண்மையில் நடைபெற்றது. இதில் பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் பிற கழிவுப்பொருள்களை கடற்கரையிலிருந்து அகற்றுவதில் தன்னார்வலர்கள் மற்றும் சமூக உறுப்பினர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். (ச-25)



# உணவுப்பொருள்கள் வழங்கிவைப்பு

கிளிநொச்சி, பெப். 1

மாவட்ட சமூகசேவைத் திணைக்களத்தினரின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த, மாற்றுவலுவுடையோருக்கு உணவுப்பொருள்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. கனடாவில் இயங்குகின்ற 'புறுட்ஸ் கபி' நிறுவனத்தின் இயக்குநர் சின்னத்துரை சண்முகலிங்கத்தின் நிதிப்பங்களிப்பில் தெரிவுசெய்யப்பட்ட 250 பயனாளிகளுக்கு தலா 6 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.


வட மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் தம்பிராஜா குருகுலராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.முரளிதரன் கலந்துகொண்டார். (ச- 25,9)



ஒழுக்கமான நற்பிரஜைகளை உருவாக்குவதில் பெற்றோரின் பங்களிப்பு எனும் தொனிப்பொருளில், கர்ப்பிணித் தாய்மாருக்கான விழிப்புணர்வுக் கருத்தமர்வு கைதடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.
நிகழ்வில் வளவாளர்களாக பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்களான இ.தர்மேந்திரா மற்றும் க.இராசகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச- 25,9)



பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் முதல்முறையாக மேசைப்பந்தாட்டப் பயிற்சிநெறி பளை - இயக்கச்சி மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகமும் மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவும் இணைந்து இந்தப் பயிற்சிகளை முதல் தடவையாக ஆரம்பித்துவைத்தன. (ச-25,9)



# விவசாய நவீனமயமாக்கல் கிளிநொச்சியில் செயற்றிட்டம்

கிளிநொச்சி, பெப்.1

நெற்செய்கையில் விவசாய நவீனமயமாக்கல் கிராமங்களை உருவாக்கும் முன்மாதிரிச் செயற்றிட்ட அறுவடை விழா கொமர்சல் வங்கியின் ஏற்பாட்டில் யாழ். பல்கலைக்கழக விவசாயபீடம் மற்றும் விவசாயத் திணைக்களம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் கிளிநொச்சி மகிழங்காட்டுப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் கொமர்சல் வங்கியின் பொது முகாமையாளர் டிலக்சன் கெட்டியாராட்சி, கிளிநொச்சி மாவட்டச்செயலர் எஸ்.முரளிதரன், யாழ். பல்கலைக்கழக விவசாயபீட விரிவுரையாளர், விவசாயத் திணைக்களம் மற்றும் கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகள், பொறியியலாளர்கள், யாழ் .பல்கலைக்கழக விவசாயபீட மாணவர்கள், விவசாயிகள், வங்கி ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-25, 27,113)



# பொருட்கண்காட்சியும் பொங்கல்திருவிழாவும்

வவுனியா, பெப்.1

பாரம்பரிய பொருட்கண்காட்சியும், பொங்கல் திருவிழாவும் வவுனியா விபுலானந்தாக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு அதிபர் சி.தர்சன் தலைமையில் கல்லூரி வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பழையமாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இதன்போது 1-5 வரையான ஆரம்பப் பிரிவு மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுடன் இணைந்து பாரம்பரிய முறைப்படி 21 பானைகளில் பொங்கலிட்டு வழிபாடுகளை மேற்கொண்டனர். அத்துடன் தமிழர் பாரம்பரிய பாக்குவெட்டி, மண்குடம், சத்தகம், அரிக்கன், குதிரை வண்டி, விளக்கு, நீத்துப்பெட்டி, பனங்கட்டி உள்ளிட்ட பல்வேறு பொருள்களும் காட்சிப்படுத்தப்பட்டன. (ச-25,18)




வட மாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தலைவர் உமாபதி,பொதுச்செயலாளர் எஸ்.கே. தளையரட்ணம் ஆகியோரின் ஏற்பாட்டில், க.பொ.த.சாதாரணதர மாணவர்களுக்கான கணித பாடத்துக்கான இலவசக் கருத்தரங்கு, சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியின் அதிபர் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23 ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு
14 . 04 . 1947

இறப்பு
17 . 01 . 2002

கடந்த 17.01.2002 வியாழக்கிழமை சிவபதம் அடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்

## திரு. ஐயம்பிள்ளை நடராசா

**மண்கும்பானின் புதல்வன்**











கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகி போனாலும்
எம்முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர்வாழும்
மண்விட்டு மறைந்த நீங்கள் விண்ணோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாமல் கனகாலம் இருப்பீர்கள்...

அன்னாரின் இருபத்தி மூன்றாம் ஆண்டு நினைவுநாளான இன்று (01.02.2025) சனிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரமம் சைவ கலை பண்பாட்டுப் பேரவை - செல்வச்சந்நிதி தொண்டமானாறில் அன்னதானம் இடம்பெறும்.

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**



நடராசா கஜந்தன் குடும்பத்தினர்
நியூ மைதிலி ஜுவல்லர்ஸ்
சந்தோஷ் ஜுவல்லர்ஸ்

நியூ மைதிலி ஜுவல்லர்ஸ்
இல. 38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
சந்தோஷ் ஜுவல்லர்ஸ்
இல. 97A,99V, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 02 . 09 . 1942

மறைவு 12 . 02 . 2024

அமரர் திருமதி **அன்னபூரணம் நடராசா**
(முன்னாள் ஆசிரியை)
*திதி: திருதியை*

ஆண்டுகள் பல உருண்டோடி மறைந்தாலும்
ஆறாது எம் துயரம்
பாசத்தின் இருப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
வையத்துள் வாழ்வாங்கு வாழவைத்த
எங்கள் அன்புத் தெய்வமே அம்மா
உங்கள் நினைவுகளை சுமந்து
வையகத்தில் வாழ்ந்திருப்போம்

அழகு மாளிகை
சங்கானை வடக்கு, பண்டத்தரிப்பு. (CS/2408) J-1
குடும்பத்தினர்


# பலமான எதிர்க்கட்சி கட்டியெழுப்பப்படும்

## முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா தெரிவிப்பு

கொழும்பு, பெப்.1

பலமானதொரு எதிர்க்கட்சி கட்டியெழுப்படும் என்று முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"நான் அரசியலில் இருந்து ஓய்வுபெறவில்லை. பொதுவெளிக்கு வராவிட்டாலும் அரசியல் தொடர்கின்றது. பலமானதொரு எதிரணி கட்டியெழுப்பப்படும்" எனவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை இந்தச் சந்திப்புத் தொடர்பில் கருத்து வெளியிட்ட அநுர பிரியதர்சன யாப்பா, "மக்கள் ஒத்துழைப்புடன்தான் ஆட்சியை மாற்றவேண்டும். அதற்காக நாம் ஒன்றிணையவேண்டும். தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்ளவேண்டும். அரசியல் ரீதியிலான ஒற்றுமை அவசியம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

"அரசாங்கத்தின் ஒடுக்குமுறை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இதற்கு எதிராக கூட்டு நடவடிக்கை எடுப்பது பற்றி பேசப்பட்டது. நாடாளுமன்றத்துக்கு வெளியில் உண்மையான அரசியலை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது" என்று இச்சந்திப்பில் பங்கேற்ற உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். (எ44)


# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 15.10.1945 — மறைவு 29.01.2025

**திருமதி டென்சில் சேவியர் மேரி றோஸ்**

எமது பாடசாலையின் அதிபர் திரு டெ.சே.சுவைனஸ் அவர்களின் தாயாரின் பிரிவில் பாடசாலை சமூகம் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா நித்திய இளைப்பாற புனித பேதுருவானவரை மன்றாடுவதுடன் இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலை சமூகம்,
யா/மண்டைதீவு றோ.க. வித்தியாலயம்,
மண்டைதீவு.



# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 13.05.1961

மறைவு 19.01.2025

கடந்த 19.01.2025 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த

## அமரர் வடிவேல் செல்வராஜா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (02.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் இரதபவனி ஆரம்பித்து சாட்டி வெள்ளைக்கடற்கரை புனித தீர்த்தக்கரைக்கு எடுத்துச்செல்லப்படும். வீட்டுக்கிருத்திய கிரியைகள் 03.02.2025 திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். எமக்கு நேரிலும், தொலைபேசியிலும் ஆறுதல் கூறியவர்களும் மற்றும் சகல விதங்களிலும் உதவியவர்களும் நேரில் அழைக்கத் தவறியவர்களும் இவ்வழைப்பை ஏற்று எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

124/15, செல்லர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

T.P.: 077 968 2939
076 116 0121

குடும்பத்தினர்



# மரண அறிவித்தல்



## திருமதி அன்னபூரணம் அரசரத்தினம்

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னபூரணம் அரசரத்தினம் அவர்கள் கடந்த 29.01.2025 புதன்கிழமை கொக்குவில் இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அரியகுட்டி-நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அரசரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகராசா மற்றும் தர்மலிங்கம், கமலம், ஞானேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சிவஞானம், தேவசுந்தரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயதேவி, மதியானந்ததேவி, மணிவர்ணன், சிறிதேவி, காலஞ்சென்ற கமலக்கண்ணன் மற்றும் திருமுருகன் ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வேந்திரம், நடனசபா, சீதாதேவி, விபுலானந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.02.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
(CS 2411) P-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோல் விலையில் மாற்றம் எதுவுமில்லை

கொழும்பு, பெப். 1

எரிபொருள் விலைகள் நேற்றுப் புதுப்பிக்கப்பட்டுள்ளன. சுப்பர் டீசலைத் தவிர வேறெந்த எரிபொருள் விலைகளிலும் மாற்றங்கள் ஏற்படவில்லை.

இதன்படி, சுப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலை 18 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலையாக 331 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஏனைய எரிபொருள்களின் விலைகளில் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை. இதன்படி, மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 183 ரூபாவாகவும், ஒக்ரேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 309 ரூபாவாகவும், ஒக்ரேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 371 ரூபாவாகவும் தொடர்ந்தும் பேணப்படும் என இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. (ம-இ)

# இந்திய மீனவர்கள் மீது சூடு நடத்தவே முடியாது

## முன்னாள் அமைச்சர் கருத்து

கொழும்பு, பெப். 1

இந்திய மீனவர்கள் அத்துமீறினால் பதிலுக்கு துப்பாக்கிச்சூடு நடத்த முடியாது என்று முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.


எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை அண்மையில் துப்பாக்கிச்சூடு நடத்தியிருந்தது. இதையடுத்து, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான பின்னணியிலேயே, 'எக்காரணத்துக்காகவும் மீனவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்த முடியாது' என்று வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளார். இலங்கை கடற்படையினரின் நடவடிக்கையால் இந்திய மீனவர்கள் இருவர் காயமடைந்துள்ளனர். துப்பாக்கிச்சூடு நடத்தி நட்புறவைக் கட்டியெழுப்ப முடியாது. துப்பாக்கிச்சூடு நடத்த வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டிருந்தால், அதற்கான காரணங்களை உரிய வகையில் முன்வைக்க வேண்டும் என்றும் முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளார். (ம)

# அனைத்து மக்களும் கொண்டாட தனிவிழா

இலங்கையில் அனைத்து இன மக்களும் கொண்டாடும் வகையில் தனியான தினம் ஏற்படுத்தப்படும் என்று ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார். எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் அது தொடர்பான அறிவிப்பு வெளிவரும் என்றும் ஜனாதிபதி அநுர மேலும் கூறியுள்ளார். (ம-26)

# மரண அறிவித்தல்

தோற்றம்
22 . 04 . 1952



மறைவு
31 . 01 . 2025

**அமரர் வன்னியசிங்கம் ஆறுமுகஜோதி**

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வன்னியசிங்கம் ஆறுமுகஜோதி அவர்கள் நேற்று (31-01-2025) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாப்பிள்ளை வன்னியசிங்கம், வன்னியசிங்கம்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-சரஸ்வதிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், பராசக்தி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற ஆறுமுகவடிவேல், ஆறுமுகநாதன், ஆறுமுகசுவாமி (ஜேர்மனி), சரஸ்வதிதேவி (பிரான்ஸ்), தவமணிதேவி, காலஞ்சென்ற யோகீஸ்வரி மற்றும் சாந்தினி (பொட்ஸ்வானா), ஆறுமுகலிங்கம் (கனடா), ஆறுமுகசீலன் ஆகியோரின் சகோதரனும் யோகேஸ்வரி (லண்டன்), காலஞ்சென்ற புவனேஸ்வரி (ஓய்வுபெற்ற அதிபர்) மற்றும் சற்குணேஸ்வரி (ஜேர்மன்), காலஞ்சென்ற நடராஜா மற்றும் வாமதேவன், செல்வராசா (ஓய்வுபெற்ற கிராமசேவகர்), பாலராஜேஸ்வரன் (பொட்ஸ்வானா), சாந்தினி (கனடா), நிர்மலலவி, கனகாம்பிகை ஆகியோரின் மைத்துனரும், கந்தசாமி அவர்களின் சகலனும், பிரணவன் (டயலொக்) அவர்களின் சிறியதகப்பனும், பிரணவன் விஜிதா (தென்மராட்சி பிரதேச செயலகம்) அவர்களின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மானிப்பாய் - கைதடி வீதியின் நவீல்ட் பாடசாலை ஒழுங்கையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (02-02-2025) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணியளவில் இறுதிக்கிரிகைள் இடம்பெற்றுப் பூதவுடல் தகனக்கிரிகைக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 315) V-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
18 . 01 . 1955



மறைவு
31 . 01 . 2025

**இராசு தர்மகுலசிங்கம் (தறுமு) - சமாதான நீதவான்**

கந்தர்மடம் பழம் வீதியை பிறப்பிடமாகவும் றக்கா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசு தர்மகுலசிங்கம் (தறுமு) (ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர் யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்) அவர்கள் நேற்று (31.01.2025) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி இராசு (JP) - இராசமணி தம்பதியரின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்ற அருளானந்தம் விக்டோரியா தம்பதியரின் மருமகனும், அனற்மேரி மெற்றில்டா அவர்களின் அன்புக் கணவரும், தனுஸ்யா (லண்டன்), பிரியங்கா (சட்டத்தரணி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சர்மிலன் (லண்டன்), சலீஸ்ரன் (மருத்துவ விற்பனை பிரதிநிதி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பிரதிக்ஷா (லண்டன்), தக்ஷிதா(லண்டன்), ஆதிராசாய் ஆகியோரின் பாசமிகு பேரனும், தனபாலசிங்கம், காலஞ்சென்றவர்களான குணசிங்கம், துரைராஜசிங்கம், விஜயகுமாரி மற்றும் இராஜகுமாரி, செல்வகுமாரி, ஞானகுமாரி ஆகியோரின் அன்பு மூத்த சகோதரனும், இராஜேந்திரம், சாந்தலிங்கம், காலஞ்சென்ற மனோரஞ்சிதன் மற்றும் அம்பிகாவதனி, றதனி, காலஞ்சென்ற அனற் கிளறிஸ் (ஜேவதி) மற்றும் றெஜினோல்ட் (ஜெயசீலன்-ஜேர்மனி), மற்றும் அனற் வியாட்றிஸ் (கனடா), அனற் யூலியற் (ஜேயந்தி - டென்மார்க்), அனற் டொலிறேஸ் (டக்ஷினி - கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.02.2025) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 2074) A

# மரண அறிவித்தல்

தோற்றம்
18 . 04 . 1956



மறைவு
31 . 01 . 2025

**தம்பு இராமதாஸ் (ரகு)**

ஆதி மயிலிட்டியை பிறப்பிடமாகவும் மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு இராமதாஸ் (ரகு) அவர்கள் நேற்று (31.01.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு-தங்கப்பிள்ளை ஆகியோரின் மகனும் இராமதாஸ் அமிர்தநாயகியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தர்மவரதன் சகுந்தலாதேவியின் அன்பு மருமகனும் முருகதாஸ், பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அபர்ணா, அஜன், யசிகா, துசான் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ரூபன், சங்கீதா, கிரிதரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சவீனா, அஸ்வின், தரனேஷ், தெய்வேஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.
அஜன்: 077 027 9693

(CS 2416) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

**மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி**

ஏ.ஆனன் மெல்வின்ஷன் 163, ஆர். ரோஷன் 161, டி. ஜூடரோஜன் 158, ஏ. அஸ்வின் ஷானன்156, ஏ. ஓரேனியோ சோயிஷா154,

வி. கிறிஸ்தாஸ்154,ஜே. ஜெஷிமோன்154,எப். ஷஹான் குரூஸ்152, ஆர்.அபினாஷ்152, சி.ஆர். சாடோக்152, ஜே. ஆன்லி ஸ்டெபின்150, எஸ்.எம்.ஜெஹீல்150, ஆர். எபிரோன் 150,ஆர்.ஜெஷோன்148, எஸ். ரெபிக் ஷெர்மன்147, எம்.ஆர். அகமது ஆகா147,சி. தீசன்147 ,ஏ.ஈடன் 146,என்.ஹர்ஷனகுமார்144,சி. ஜூட் இவான்ஸ்டீன்141, ஜி. காஸ்மேயன்141,ஏ.வி.நிதுன்141,எம். ஒஸ்தியான்140,பி. அஸ்கரோன்140, ஏ.மரியோ நிவோன்ஷன்139,கே. ரினோஜன் (சிறப்புத் தேவைப் பிரிவு) -93

**நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி**

சீ.வைஷ்ணவி 155, பொ.சமீரா 150, ம.கீர்த்தனா 140,

**யாழ்ப்பாணக்கல்லூரி**

வி.காசினி 174, சி. அட்சயன் 167, வி. ஹர்நிஷ் 164, சு.ஆத்விகா 160, இ. சுபகரன் 159, ப.அக்ஷிகா 159, சா. ஜெஸ் கம்லேஷ் 156, நி. ஆதித்தியன் 154, க. ரக்ஷ்யா 152, ஞா.ரபிஸ்னா 152, ந.ஜதுர்சா 152, க. சர்மன் 152, கை.பிரணவி 148, ச. தேனிசன் 147, ஜீ.கபிலாஸ் 146, தே.யசீதன் 146, ப. டனோஷன் 144 க. அபிஷிகா 144, கே.தரணிகா 143 சு. ரோஜிதன் 141, ல.பிரியங்கி 141, சி. மிதுரன் 140, கோ.அஸ்வினி 140

**உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்**

ச.சஸ்மிதன் 150, க.அபிஷ்கா 149, உ.கவிதாஞ்சன் 147 , யோ. ஹரிஷாந் 141, லோ.யஷ்மினா139

**கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம்**

அ.ஸ்ருதி 157,ர.ருக்சகயன் 144,ற்.கஜானன் 140,ச.அபிலாஷ் 139

**கைதடி குருசாமி வித்தியாலயம்**

க.கஸ்வின் 147,சி.நந்தியா 60

**மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை**

பெங்சமின்கீரந்தையன் சாம்ஆதவன் 175,ரங்கதாஸ் பவினேஸ் 173,குகறாஜன் இந்துஜா 168,பாலசுரேஸ் லக்ஸ்மவர்ணன் 167,அன்ரன் இம்மானுவேல் நிகாஷன் 166,யுகேஸ் ஆருத்தன் 166,கௌரீதரன் ஹரிணிகா 163,ராஜேஸ்வரன் சயந்திகா 162,யனோஜன் தபிசாந் 160,ஸ்ரீகாந் ஸ்ரீசுபகா 160, உதயசங்கர் பிறவின் 160, கஜேந்திரமோகன் கோசிகன் 159,கிருஸ்ணமேனன் ஹிசாணன் 156, அனுசன் தனக்ஷிகன் 155,வாசுதன் ஜிசாந்த் 155, கிரிதர் கோணேசன் 154, சக்திவேல் ரஷிகா 154,சுசீந்திரகுமார் கனுராஜ் 153,சிவநேசன் பிறிதிகா 153,சுதாகரன் கபீஸ் 153,பகீதரன் ஆர்வலன் 151,தீபன் சஸ்மிகா 151,கஜமுகன் ரிஷானி 151,பேபியன் ஜெரோபா ரவின்கெய்ஷன் 149,மதன குமார் ஷியாம் 149,கருணானந்தன் பிரணவன் 149,சந்திரமோகன் அஸ்வியா 148,மகிழ்நாதன் கரணிகா 147,டினேஸ் பார்கவி 146,அயூரன் ஆதனா 144,புஸ்பகுமார் கம்சாயினி 144,கிருஷாந் சஞ்ஜேய் 143, சுதர்சன் கேசவி 143,ஜெகதீசன் திலக்ஷிகா 143,சசிகுமார் அஸ்வின் 140,பாலேந்திரன் தருநிகன் 139,ஜெயஸ்ரீபன் ஸரோன் எஸ்ரா 139

**யா/உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை**

ஆர். ரூத் என்ரியா 165, எஸ்.கர்லின் 158, ஜெ.லஸ்னிகா 148, எம். ஹைய்மி 141

**யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்**

ச.தசாயினி 144, பி.பவின்சிகா 141

(ச-25, 214-125-159, 17)

## பிரத்தியேகமான "தங்க நிதியம்" அனுகூலத்துடன் அமானா லைஃப் இன்சூரன்ஸ் வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில் விஸ்தரிப்பு





இலங்கையின் முன்னணிக் காப்புறுதி சேவைகள் வழங்குநரான அமானா லைஃப் இன்சூரன்ஸ், தனது புத்தாக்கமான மற்றும் வாடிக்கையாளர்களை நோக்காகக் கொண்ட காப்புறுதித் தீர்வுகளை பரந்தளவில் அணுகச் செய்யும் வகையில் வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களுக்கு தனது சேவைகளை உத்தியோக பூர்வமாக விஸ்தரித்துள்ளது.

இந்த விரிவாக்க பணிகளுக்கு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜிஹான் ராஜபக்ச மற்றும் காப்புறுதித் துறையில் சுமார் 21 வருடங்களுக்கு மேலான அனுபவத்தைக் கொண்டுள்ள விற்பனைகள் பிரிவின் உதவி பொது முகாமையாளர் புவிராஜ் ஆகியோர் தலைமைத்துவமளித்திருந்தனர்.

அவரின் சிறந்த தலைமைத்துவ பண்புகளுடன், உயர் திறன் படைத்த அணிகள் மற்றும் திறமைகளைக் கட்டியெழுப்பல் போன்றவற்றுக்காக தமக்கென நற்பெயரை கட்டியெழுப்பியுள்ளார். மேலும், BSc(Hons), MBA, Certified Professional Marketer Asia போன்ற உறுதியான கல்விசார் தகைமைகளைக் கொண்டுள்ள இவர், இந்தப் பிராந்தியங்களில் அமானா லைஃப்பின் செயற்பாடுகளுக்கு தமது நிபுணத்துவம் மற்றும் நோக்கத்தை சேர்த்துள்ளார்.

அமானா லைஃப் தமது தயாரிப்பு தெரிவுகளின் அங்கமாக, தங்க நிதியத்தை காப்புறுதிதாரர்களுக்காக அறிமுகம் செய்திருந்தது. அதனூடாக, காப்புறுதி முதிர்வு அனுகூலத்தை தங்கமாக காப்புறுதிதாரர்களுக்கு பெற்றுக் கொள்ள முடியும். இதன்மூலம், பணத்துக்கு பதிலாக பெறுமதி குன்றாத உறுதியான மாற்றீட்டை காப்புறுதிதாரர்கள் பேண முடியும். இந்த பிரத்தியேகமான வழங்கலினூடாக, அமானா லைஃப் சேவைகளை பெற்றுக் கொடுக்கும் சமூகத்தாரின் தேவைகளையும், தெரிவுகளையும் அறிந்து, அதற்கேற்ற வகையில் தமது சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளது. தங்க நிதியத்துக்கு மேலதிகமாக, அமானா லைஃப் மூலமாக, பரந்தளவு காப்புறுதித் தீர்வுகள் வழங்கப்படுகின்றன.

இதில் சிறுவர் கல்வித் திட்டங்கள், ஆயுள் மற்றும் சுகாதார பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் நீண்ட கால சேமிப்புத் திட்டங்கள் போன்றன அடங்குகின்றன. இந்தத் தீர்வுகள், பரந்தளவு தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், அமானா லைஃப்பின் ஒழுங்கு, வாடிக்கையாளர் மையப்படுத்திய சேவைக் கொள்கைகளின் பிரகாரம் அமைந்துள்ளது. இந்த விரிவாக்கம் தொடர்பில் ராஜபக்ச குறிப்பிடுகையில், "வடக்கு மற்றும் கிழக்கில் எமது பிரசன்னம் என்பது, புவியியல் அமைவிட விரிவாக்கம் என்பதற்கு அப்பாலானது.

உறவுகளை கட்டியெழுப்புவது, பொருத்தமான தீர்வுகளை பெற்றுக் கொடுப்பது மற்றும் எமது வாடிக்கையாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது போன்றவற்றுக்கான எமது அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றது. புத்தாக்கமான மற்றும் தங்கியிருக்கக்கூடிய நிதிசார் தீர்வுகளினூடாக தனிநபர்கள் மற்றும் குடும்பதாரின் எதிர்காலங்களை பேணுவதில் நம்பிக்கையை வென்ற பங்காளராக திகழ நாம் முயற்சிக்கின்றோம்." என்றார்.

சமூக ஈடுபாடு மற்றும் பொருத்தமான தீர்வுகளினூடாக, இந்தப் பிராந்தியங்களில் நீண்ட காலம் நிலைத்திருக்கும் நேர்த்தியான தாக்கத்தை ஏற்படுத்த அமானா லைஃப் எதிர்பார்க்கின்றது. அனைத்து இலங்கையர்களும் தங்கியிருக்கக்கூடிய மற்றும் உள்ளடக்கமான காப்புறுதி சேவை வழங்குநராக திகழும் தமது அர்ப்பணிப்பை மீள உறுதிசெய்துள்ளது.



இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ஐ.ஓ.எம் நிறுவனத்தின் பிரதானியாக அண்மையில் பதவியேற்ற க திருமதி.கிறிஸ்டின் பாகோ, முதற் தடவையாக யாழ்ப்பாணம் வருகைதந்துள்ள நிலையில் மரியாதை நிமித்தமாக யாழ். மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபனை மாவட்டச் செயலக அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார். (ச-22,66)

## மீள்குடியேற்றம் கலந்துரையாடல்


கிளிநொச்சி, பெப்.1

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் வெடிபொருள்கள் அகற்றப்பட்ட முகமாலை, இத்தாவில் மற்றும் வேம்பொடுகேணி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் மீள்குடியேற்றத்தைத் துரிதப்படுத்தும் நோக்கிலான கலந்துரையாடல் முகமாலைப் பொது மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலாளர், வெடிபொருள்கள் அகற்றும் நிறுவனங்கள், மீள்குடியேற்றத்துடன் தொடர்புடைய அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள், பாதுகாப்புத் தரப்பினர் மற்றும் மீள்குடியேற்ற வேண்டிய குடும்பங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25,113)







வடலி அம்மன் என அழைக்கப்படும் சுன்னாகம் மயிலணி முத்துமாரி அம்மன் ஆலய அபிராமிப் பட்டர் உற்சவம் கடந்த புதன்கிழமை அபிஷேகத்துடன் ஆரம்பமாகி பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-25,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அன்ரன் மரியமலர்

தோற்றம் 05.05.1939 மறைவு 30.01.2024

உன் இதயம் இந்த உலகில் இல்லாவிட்டாலும்
உன் நினைவில்தான் எங்கள்
இதயமே துடிக்கின்றது.

973 /19, சென்ஜோசப் லேன்,
வளன்புரம்.

நீங்கா நினைவில்
உறவினர்கள் மற்றும்
குடும்பத்தினர்கள்

# நடமாடும் மருத்துவமுகாம்


யாழ்ப்பாணம், பெப்.1

தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் தொற்றாநோய்கள் தடுப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடமாடும் மருத்துவப் பரிசோதனை முகாம் மறுவன்புலோ பொதுநோக்கு மண்டபத்தில் இன்று காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

மருத்துவமுகாமில் ஜே/295, ஜே/296,ஜே/297,ஜே/298,ஜே/299 ஆகிய கிராமசேவகர் பிரிவுகளில் வசிக்கும் பொதுமக்கள் பங்குபற்றி தொற்றா நோய் தொடர்பான பரிசோதனைகளை மேற் கொள்ளமுடியும். (ச-25-9)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு 26 . 09 . 1945



உதிர்வு 06 . 01 . 2025

கடந்த 06.01.2025 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் கணபதிப்பிள்ளை சிவதாசன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை மறுதினம் (03.02.2025) திங்கட்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் எதிர்வரும் **(05.02.2025)** புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


எமது குடும்பத்தலைவர் அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு எமது இல்லத்துக்கு வருகை தந்தவர்களுக்கும், தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் துண்டுப்பிரசுரங்கள், பதாதைகள், மலர்வளையங்கள் மூலம் அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மூளாய் கிழக்கு,
சுழிபுரம்.

குடும்பத்தினர்.
077 779 0001

(CS/57322) J-1

# 23 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## திரு. ஐயம்பிள்ளை நடராசா

(மைதிலி நகைமாட ஸ்தாபகர்)

01.02.2025

பிறப்பு 14.04.1947 இறப்பு 17.01.2002

அன்பின் சிகரமே
வாழ்வின் ஒளிவிளக்கே
எம் குடும்பத்தலைவனே!
எம் வாழ்வின் வழிகாட்டிய தீபமே!
காற்றிலே கலந்து ஆண்டுகள் இருபத்திமூன்று ஆனாலும்
காலடி தழைக்கும் உம் நினைவுகள்
எம் மனத்திரையினுள்ளே முளையரும்பி கொடியாய்
மலர்ந்து மணம் வீசியபடி இன்னும் இருக்கிறீர்கள்
தோளிலே தெளித்த பாசத்தூறல்கள்...
வாழ்வில் ஆயிரமாயிரம் கண்கள் ஓரம்
கண்ணீர் துளிகளாய் நீங்கள்..
தீண்டும் பொருளெல்லாம்
நீங்கள் தானே அப்பா - மறைந்து
ஆண்டுகள் இருபத்திமூன்று ஆன போதும் சிறகிழந்து
தவிக்கிறோமே அப்பா
இருபத்திமூன்று ஆண்டுகள் என்ன
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவலைகள் என்றும்
எம் நெஞ்சினில் நீங்காமல் நிலைத்திருக்கும்...
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

"சிவசனுஜாஸ் இல்லம்"
இல. 55,
அம்பலவாணர் வீதி,
அத்தியடி யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
உரிமையாளர் -
மைதிலி நகைமாடம் (Pvt) Ltd) - யாழ்ப்பாணம்
யாழ்மைதிலி ஜுவலர்ஸ் - கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீரிமலை

## ஜனாதிபதி மாளிகையை கையளிப்பதற்குத் தயார்

யாழ்ப்பாணம், பெப். 1
யாழ்ப்பாணம் கீரிமலை பகுதியில் உள்ள ஜனாதிபதி மாளிகையைப் பொதுப்பயன்பாட்டுக்காகக் கையளிப்பதற்கு ஜனாதிபதி அநுர இணக்கம் தெரிவித்துள்ளார்.
கீரமலை பகுதியில் உள்ள ஜனாதிபதி மாளிகை எனது பயன்பாட்டுக்குத் தேவையில்லை. முறையான முன்மொழிகள் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் அந்த மாளிகை பொதுமக்களின் பயன்பாட்டுக்காக விடுவிக்கப்படும். குறித்த பகுதியில் பொதுமக்களின் காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுக்கு இழப்பீடுகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.
(ம-26-125)

## பேராசிரியர் புஸ்பநாதன் காலமானார்

யாழ்ப்பாணம், பெப். 1
புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த பேராசிரியர் புஸ்பநாதன் நேற்றுக் காலமானார்.
வவுனியா பல்கலைக்கழகத்தின் முதலாவது பேராசிரியர் என்ற பெருமையைப் பெற்றிருந்த அவர் அண்மைக்காலமாக நோய்வாய்ப் பட்டியிருந்த நிலையில் நேற்றுக் காலமானார். 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி வவுனியா பல்கலைக்கழகப் பேரவையால் அவர் பேராசிரியராகப் பதவியுயர்த்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-இ)

# மாவை சேனாதிராஜாவின் மறைவு தமிழர் அரசியல் சரித்திரத்தின் முடிவு

## எஸ்.தவராசா தெரிவிப்பு

மூத்த அரசியல் போராளியான அண்ணன் மாவை சேனாதிராஜாவின் மறைவு, ஈழத் தமிழர்களின் அரசியல் சரித்திரத்தை முடிவுக் குக் கொண்டுவந்துள்ளது என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.தவராசா தெரிவித்துள்ளார்.
மாவை சேனாதிராஜாவின் மறைவையிட்டு வெளியிட்டுள்ள இரங்கல் செய்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
ஈழத் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக 60 ஆம் ஆண்டுகளில் இருந்து இறுதி வரையில் தீவிரமாகச் செயற்பட்டவர், தனது மூச்சை நிறுத்தி இருக்கின்றார். ஈழத் தமிழர்களின் ஒரு சரித்திரம் ஓய்ந்திருக்கின்றது என்று சொல்லலாம்.
70களின் ஆரம்பங்களில் என்னுடைய அரசியல் செயற்பாடுகளின் ஆரம்பத்தில் எம்மால் ஆரம்பிக்கப்பட்ட மாணவர் பேரவையின் முதலாவது கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்தாழமிக்க உரையை நிகழ்த்தினார். அந்தவகையில், நான் சந்தித்த முதலாவது அரசியல் தலைவராக மாவை சேனாதிராஜா அவர்களையே அடையாளப்படுத்துவதுண்டு.
எமக்கும் அவருக்கும் இடையில் கருத்தியல் வேற்றுமைகள் ஏற்
பட்டபோதிலும், பரஸ்பரபுரிதல்தொடர்ந்துகொண்டே இருந்தது.
அண்ணன் மாவை சேனாதிராசாவின் மறைவினால் துயருற்றிருக் கும் உறவினர்கள், கட்சி உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எனது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன் - என்றுள்ளது. (எ-இ)

திருமணமானோருக்கான

# உலக அழகிப் போட்டியில் இலங்கை இரண்டாமிடம்

அமெரிக்காவின் லாஸ்வேகாஸில் நடைபெற்ற 40 ஆவது திருமணமான உலக அழகிப்போட்டியில் இலங்கையைச் சேர்ந்த இஷாதி அமந்தா இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார்.
இம்முறை திருமணமான உலக அழகி கீரிடத்தை தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்தவர் வென்றுள்ளார். மேலும், தாய்லாந்தைச் சேர்ந்தவர் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார். (ச-இ)


உ
குஹமயம்

## ஆசார்யாபிஷேக அழைப்பு

யாதினுமினியீர்!

நிகழும் குரோதி வருடம் தை மாதம் 21ம் நாள் (03.02.2025) திங்கட்கிழமை காலை நாடி 7.47 விநாடி முதல் நாடி 10.44 வரையுள்ள காலை 09:30 மணிக்கும் காலை 10:30 மணிக்குமிடையில் வரும் ரேவதி நட்சத்திரமும் மீன லக்கினமும் கூடும் சித்தயோக சுபமுகூர்த்த வேளையில்,

எமது சிரேஷ்ட குமாரனும், மாவை ஆதீன இளவரசுமான

### ஞானஸ்கந்த சர்மா விற்கு

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் வசந்த மண்டபத்தில் எம்பெருமான் கந்தசுவாமியார் முன்னிலையில், சிவாச்சாரியார், சான்றோர், சைவ அடியார்கள் சகிதம் ஆசார்யாபிஷேகம் செய்துவைக்க அனுக்கிரகம் பெற்றுள்ளேன். வர்ணாச்சிரம தர்ம எல்லைக்குள் வாழும் அந்தணப் பெருந்தகைகளை ஆதரித்து அவர்தம் கடமைகளில் ஆழ்ந்த சிரத்தைகள் எடுப்பதற்கு ஆற்றுப்படுத்தும் பெருந்தொண்டு சைவப்பெருமக்களது கடமையாகும். ஆகவே ஆசார்யாபிஷேகம் பெற்று எம்பெருமானின் தொண்டுகளிலும், சைவ மக்களது சமய ரீதியான தொண்டுகளிலும் ஈடுபடுத்துமுகமாக நடாத்தப்படும் இவ்வைபவத்தில் அனைவரும் குடும்ப சமேதராக வருகைதந்து இது உங்கள் விழாவாக ஏற்று எம்மையெல்லாம் மகிழ்வித்து, மாவை ஆதீன பரம்பரை தடைகளேதுமின்றி நன்றாக வாழ வேண்டுமென வாழ்த்தியும், அதற்கெல்லாம் திக்கெட்டும் நல்லருள் புரியும் மாவைக்கந்தசுவாமியாரது திருவருள் அபரிமிதமாகச் சொரிய வேண்டுமென விழாவின்போது பிரார்த்திக்குமாறு மிகுந்த அன்புடன் அழைக்கின்றோம்.
தொடர்ந்து நடைபெறும் விருந்து உபாசார போஜனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

| | | | |
|---|---|---|---|
| 02.02.2025 | ஞாயிற்றுக்கிழமை | மாலை | பூர்வாங்கம் |
| 03.02.2025 | திங்கட்கிழமை | காலை 09:30 முதல் 10:30 வரை | ஆச்சார்யாபிஷேகம் |
| | | காலை 10:45 | அறிஞர்களது வாழ்த்துரை, ஊர்வலம் |
| | | நண்பகல் 12:30 | உச்சிக்காலப்பூசை |
| | | | விருந்து உபசாரம் மதிய போஜனம் |

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரையும் குடும்பசகிதமாக வருகைதரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

சுபமஸ்து

கலியுகம் 5126
மாவை ஆதீனப் பேரரசு
மாவை ஆதீனம்
மாவிட்டபுரம்
தெல்லிப்பளை

தங்களது வருகையை எதிர்பார்க்கும்
மஹாராஜஸ்ரீ [illegible] இரத்தினசபாபதிக் குருக்கள்
குடும்பத்தினர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேனாதிராஜாவின் மறைவு தமிழ் மக்களுக்கு பேரிழப்பு

## திராவிடர் கழகத் தலைவர் இரங்கல்

சென்னை, பெப்.1

இலங்கை அரசியல் வரலாற்றின் மிக முக்கியமான காலகட்டத்தில் மாவை சேனாதிராஜாவின் மறைவு தமிழ் மக்கள் அனைவருக்குமான பேரிழப்பாகும் என்று தெரிவித்துள்ளார் தமிழகத்தின் திராவிடர் கழகத்தின் தலைவர் கி.வீரமணி. மாவை சேனாதிராஜாவின் மறைவுக்கு விடுத்துள்ள இரங்கல் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இளமைக் காலம் முதலே தமிழர் உரிமைக்கான அறவழிப் போராட்டங்களில் ஈடுபட்டு, ஈழத் தந்தை செல்வா, தோழர் அமிர்தலிங்கம் ஆகியோரின் அடியொற்றி நடந்தவர். இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழர்களுக்காக அவர் குரல் தொடர்ந்து ஒலித்துவந்தது. தமிழர்கள் மிக மோசமான சூழலில் தள்ளப்பட்டிருந்த காலத்தில், கடந்த 10 ஆண்டுகளாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகவும் இருந்து வழிநடத்திய மூத்த தலைவர் அவர். 2024 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் நாம் யாழ்ப்பாணத்திற்குப் பயணம் மேற்கொண்டிருந்தபோது, நம்மை வரவேற்க யாழ்ப்பாண விமான நிலையத்துக்கு வந்து அழைத்துச் சென்றதுடன், மூன்று நாள்களிலும் தன்னுடைய உடல் நலிவைக் கூட பொருட்படுத்தாமல், பல முறை வந்து சந்தித்து, தமிழர் உரிமை தொடர்பாகத் தம்முடைய கவலையை வெளிப்படுத்தி, தமிழர் ஒற்றுமைக்கான பணிகளைக் குறித்துக் கலந்துரையாடினார். அவரது மறைவால் துயருற்றிருக்கும் அவரது வாழ்விணையர், மகன் மற்றும் குடும்பத்தினர், நண்பர்கள், அவர்தம் இயக்கத் தோழர்களுக்கும் நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம் - என்றுள்ளது. (எ-இ)


## பகுதி நேர வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் நீண்டகாலமாக இயங்கிவரும் காப்புறுதி நிறுவனம் ஒன்றிற்கு பணிவெற்றிடங்கள் விற்பனைத்துறையில் உள்ளன.

குறிப்பு:- அரச உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஓய்வூதியம் பெறுவோர், தனியார் துறையில் பணியாற்றுவோர், வியாபாரம் செய்வோர் பகுதி நேரமாகவும் பணியாற்ற முடியும்.

கல்வித் தகைமைகள்:-

- **G/C/E, O/L தமிழ், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி (கட்டாயம்)**
- **A/L விரும்பத்தக்கது.**
- **விற்பனைத்துறையில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

உங்களது சுயவிபரக் கோவையை Whatsapp இலக்கத்திற்கு 10.02.2025 க்கு முன்னர் அனுப்பவும்.

**T.P/ Whatsapp - 077 934 8512**

**T.P :- 076 551 4542**

(CS/57366) J-1

## வலிதெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.
## படவரைஞராகப் பதிவு செய்தல் / புதுப்பித்தல் -2025
## காலநீடிப்பு

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் 47 தொடக்கம் 59 வரையானதுடன், மற்றும் 1978 ஆண்டின் 41ம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் புதிய திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி ஆணை / ஒழுங்கு விதி நடைமுறைகளுக்கமைவாகவும் வலி தெற்கு பிரதேச சபையில் 2025ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவுசெய்வதற்காக 30.11.2024ம் திகதிய உதயன், வலம்புரி, தினக்குரல் பத்திரிகைகளில் பிரசுரித்தமைக்கு மேலதிகமாக காலநீடிப்பு செய்யப்பட்டு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

எனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் புதிதாக பதிவு செய்பவர்களும் 2025ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும் / புதுப்பித்துக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கு கல்வித் தகைமை Drafting Technology Civil - NVQ Level - 5 அல்லது Drafting Technology Civil - NVQ Level - 5 கற்கை நெறியினை தொடர்வதற்கான சிபாரிசுக் கடிதம் இருத்தல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளவும்.

**குறிப்பு :-**

| | |
|---|---|
| படவரைஞராக பதிவு மற்றும் புதுப்பித்தல் படிவ கட்டணம் | - ரூபா 1,000.00 |
| படவரைஞராக பதிவு மற்றும் புதுப்பித்தல் கட்டணம் | - ரூபா 3,000.00 |
| படவரைஞராக புதிதாக பதிவு செய்வதற்கான கட்டணம் | - ரூபா 5,000.00 |

**சாரதா உருத்திரசம்பவன்**
**செயலாளர்,**
**வலிதெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**

(cr.44222) (N-1)

## மரண அறிவித்தல்



தோற்றம் 24 . 11 . 1973

மறைவு 28 . 01 . 2025

### அருட்பணி ஜெகநாதன் அன்ரனி சுதாகர்

மானிப்பாயை பிறப்பிடமாகக் கொண்டவரும் நவாலி சி.ஏ.சி.எம். திருச்சபையின் அருட்பணியாளருமான அருட்பணி ஜெகநாதன் அன்ரனி சுதாகர் அவர்கள் கடந்த 28.01.2025 செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் ஜெகநாதன் - சற்குணேஸ்வரி தம்பதியரின் அன்புப் புதல்வனும், அன்ரனி சுதாகர் பானுரேகா (ஆசிரியை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், அடோன் மற்றும் பிறின்ஸ் (மாணவர்கள் - சென் ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் யசோதா ஞானசீலன், ஜெ.விக்டர் ஜெயந்தன், காலஞ்சென்ற ஜெ.பிரேம்குமார் யசிதா துசியந்தன் மற்றும் ஜெ.ஞானசீலன் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரது இறுதி நல்லடக்க வழிபாடு நவாலி சி.ஏ.சி.எம். திருச்சபையில் நாளை (02.02.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெற்று நல்லடக்கத்துக்காக சி.ஏ.சி.எம் மானிப்பாய் திருச்சபை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சி.ஏ.சி.எம் திருச்சபை**
**நவாலி.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 306 8122**

(CS/28956) J-1

## வேலைவாய்ப்பு

யாழில் இயங்கும் சுப்பர் மார்க்கட்டுக்கு கீழ்வரும் ஆட்கள் தேவை.

1. Computer Billing + Cashier (Male / Female)
2. Sales Assistant (உதவியாளர்)

வயது எல்லை : 18 - 35

யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

**விபரங்களுக்கு:077 419 5209**

(CS 2415) J-1

## செவிப்புலன் கருவிகள் விற்பனைக்கு



- செவிப்புலன் குறைபாட்டினால் கவலையா ? கவலை வேண்டாம்
- ரூபாய் 9999/= மட்டுமே செலுத்தி செவிப்புலன் கருவி ஒன்றினை உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள்
- சென்ற முறை தவற விட்டவர்களுக்கு மீண்டும் ஓர் அரிய சந்தர்ப்பம்
- உங்கள் வீட்டிற்கே வந்து பரிசோதித்து வழங்குகின்றோம்

**முன்பதிவுக்கு இன்றே அழையுங்கள்**

**077 434 6245**

(CS/57377) J-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 25 . 06 . 1939

உதிர்வு 12 . 02 . 2024

**அமரர் செல்லையா இராசலிங்கம்**
(அல்லின் வீதி, காரைநகர்)

**பாசக் கடலில் பரிதவிக்க விட்டீர்கள்.**
**ஓராண்டு ஆனதென்ன அப்பா, ஓராயிரம்**
**ஆண்டுகளானாலும் நீங்கள் எமது**
**உள்ளங்களில் ஏற்றிய அன்பெனும்**
**அகல் விளக்கு அணையாது.**
**ஆத்மா சாந்தியடைய**
**இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

அல்லின் வீதி,
காரைநகர்.

என்றும் நீங்கா நினைவுகளுடன்
**குடும்பத்தினர்**

(CS/57346) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலிக் கூட்டம்

கிளிநொச்சி, பெப். 1

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் ஏற்பாட்டில் மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளரும் 'ராவய' பத்திரிகையின் ஆசிரியருமான விக்டர் ஐவனின் அஞ்சலிக் கூட்டம் கிளிநொச்சி உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் இன்று சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் அஞ்சலி உரைகளும், காந்தீயம் விக்டர் ஐவன் சிறப்பிதழ் வெளியீடும் இடம்பெறவுள்ளன. ஆர்வலர்களைக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-25-159)

## திஸ்ஸ...

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் தெரிவித்ததாவது:-

மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். மக்கள் அந்த மாற்றத்தில் பங்குபற்ற வேண்டும் என்று ஜனாதிபதி கூறுகின்றார். மாற்றத்தில் பங்கெடுக்க வடக்கு மக்கள் தயார். ஆனால், மக்களின் காணிகளை ஆக்கிரமித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரையை அகற்றுவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பாரா?

விகாரைக்குரிய காணியில் விகாரையை அமைத்திருந்தால், எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், மக்களின் காணிகளை ஆக்கிரமித்துத்தான் விகாரை அமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பிரதேச, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களிலும் சுட்டிக்காட்டப்பட்டு இந்தச் சட்டவிரோத விகாரை அகற்றப்படவேண்டும் எனத் தீர்மானமும் எடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்தச் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதி அநுரவின் ஆட்சிக் காலத்திலும் நடவடிக்கை இல்லையா? மாற்றம் என்பது மதத்துக்கும் அப்பாற்பட்டு வரவேண்டும். மதத்தைத் தாண்டி நீங்கள் செயற்படும்போது தான் அது உண்மையான மாற்றமாக அமையும்-என்றார். (அ-ம-125-26)

## பெருந்தலைவர்...

தியுள்ளார். இதன்போது மாவை சேனாதிராஜாவின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறிய அவர் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுடனும் கலந்துரையாடினார்.

(அ-ம-26-66-20-125)

## அரசியற்...

பட்டுள்ள அரசியற்கைதிகள் தொடர்பில் ஜனாதிபதி அநுரவின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது. சிறையிலுள்ள ஏனைய அரசியற்கைதிகள் விரைவாக விடுவிக்கப்படவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா சுட்டிக்காட்டினார். எனினும், ஜனாதிபதி அநுர எந்தவொரு தீர்க்கமான பதிலையும் வழங்கவில்லை.

'இந்த விடயங்கள் தொடர்பில் சட்டரீதியான அணுகுமுறைகளின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்' என்று மட்டுமே ஜனாதிபதி தெரிவித்தார்.

இதன்போது, 'எதிர்வரும் சுதந்திரதினத்தில் பொதுமன்னிப்பு வழங்கி கைதிகளை விடுவிக்கவேண்டும்' என்று ஜனாதிபதியிடம் குரலற்றவர்களின் குரல் அமைப்பால் சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால், அதற்கும் ஜனாதிபதியால் எந்தவொரு காத்திரமான பதிலும் வழங்கப்படவில்லை.

(அ-ம-125-26)

## பொய்!...

மாற்றலாகும் பட்சத்தில் ஏற்படும் வெற்றிடத்துக்கு பிறிதொருவர் நியமிக்கப்படாமல் அவர் விடுவிக்கப்பட்டமை சர்ச்சையாகியிருந்தது. இதனால், மருத்துவமனையில் ஏற்படும் பணிநெருக்கடி தொடர்பில், ஒருங்கிணைப்புக் குழுவில் நேற்றுப் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதன்போது, சாவகச்சேரி மருத்துவமனையில் அவ்வாறு எந்த இடமாற்றமும் வழங்கப்படவில்லை என்றும், மருத்துவ நெருக்கடி இல்லை என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சபையில் உண்மைக்கு மாறான தகவலை வெளியிட்டார்.

இதையடுத்து, உடனடியாகவே அமைச்சர் பிமல் ரத்நாயக்க சுகாதார அமைச்சரைத் தொடர்புகொண்டு விடயம் தொடர்பில் வினவினார். இதன்போது, மத்திய சுகாதார அமைச்சின் ஊடாக அல்லாமல் மாகாண சுகாதார கட்டமைப்பின் ஊடாகவே இடமாற்றம் வழங்கப்பட்டதாகவும், தமக்கு அது தொடர்பில் தெரியாது என்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடம் சுகாதார அமைச்சரால் தெரிவிக்கப்பட்டது. (அ-ம-26)

## அநுரவுடன்...

நேற்று முண்டியடித்தனர். மாவட்டச் செயலகத்தில் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தை முடித்துக்கொண்டு வல்வெட்டித்துறை மற்றும் எழுதுமட்டுவாழ் பகுதிகளில் மக்கள் சந்திப்பில் ஜனாதிபதி அநுர ஈடுபட்டார். இதன்போதே, அவருடன் செல்பி எடுப்பதற்காக மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டனர். (அ-ம-26)

## காணாமலாக்கப்...

எனவே, அரசாங்கம் தேவையற்ற செலவுகளைக் குறைத்து காணாமலாக்கப்பட்டோருக்கு இழப்பீடு வழங்க வேண்டும் - என்றார்.

அதேசமயம், காணாமலாக்கப்பட்டவர்களுக்காக அரசாங்கம் இழப்பீடுகளை வழங்க முன்வந்த போதிலும், அவற்றை காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஏற்கவில்லை. உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துமாறே போராடி வருகின்றனர். இவ்வாறிருக்கையில், நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவின் கருத்து தமது போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என்று காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (அ-ம-125)

## அநுரவின்...

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நடைபெற்ற மாவட்டச் செயலக மண்டபத்துக்குள் நீண்ட பாதுகாப்புக்குப் பின்னரே பொதுமக்கள் அனுமதிக்கப்பட்டனர். ஊடகவியலாளர்களுக்கும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.

முன்னாள் ஜனாதிபதிகளான ரணில் மற்றும் மஹிந்த ஆகியோர் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்துக்கு வருகை தரும்போது அவர்களை வரவேற்கும் பகுதியில் ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்பட்டு வந்தனர். ஆனால், அநுரவின் வருகையின்போது ஊடகவியலாளர்கள் அங்கு அனுமதிக்கப்படவில்லை. அத்துடன், நிகழ்வு நடைபெற்ற மண்டபத்துக்கு உள்ளும் வெளியும் வேறுபல கட்டுப்பாடுகளும் இறுக்கமாக்கப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## கேள்விக்....

வர்களின் விடயங்கள் பொலிஸாரால் கசிப்புக் காய்ச்சுபவர்களிடம் வழங்கப்படுகின்றமை, வடமராட்சியில் தொலைத்தொடர்பு கேபிள்கள் அறுக்கப்படுகின்றமை, கச்சாயில் இடம்பெறும் மண்ணகழ்வு, போதைப்பொருள் குழுக்களின் அடாவடித்தனம், அச்சுவேலி - தொண்டமனாறு பின்வீதி சேதமடைந்து காணப்படுகின்றமை, மருதங்கேணி இயக்கச்சி வீதி சேதமடைந்து காணப்படுகின்றமை உள்ளிட்ட விடயங்களை அறிந்துகொண்டே ஜனாதிபதி யாழ்ப்பாணத்தில் களமிறங்கினார்.

இதன்போது ஜனாதிபதி அநுர மேலும் தெரிவித்ததாவது:-

சட்டவிரோத போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் பொலிஸார் பொதுமக்களின் மனதை வெல்லவேண்டும். இதை ஏன் நான் கூறுகிறேன் என்றால் சட்டவிரோதச் செயற்பாடுகள் தொடர்பில் பொதுமக்கள் பொலிஸாரிடம் முறையிடும்போது முறையிடுவோர் தொடர்பான தகவல்கள் சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு செல்கிறது. இது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்திடம் முறைப்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன - என்றார்.

(அ-ம-26)

## பொலிஸ்...

நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் வேலையற்ற பட்டதாரிகளின் விடயம் தொடர்பில் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டப்பட்டது. இதன் போதே, ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

அரச சேவையில் வெற்றிடங்கள் இல்லாமல் வேலைவாய்ப்பு வழங்கமுடியாது. எழுந்தமானமாக தொழில் வாய்ப்பை வழங்க நாங்கள் தயாரில்லை. பிரதமரின் செயலாளர் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு அரச நிறுவனங்களை நடத்திச் செல்வதில் 30 ஆயிரம் வெற்றிடங்கள் காணப்படுவதாக அடையாளம் கண்டுள்ளது. ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைய அந்த வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

அத்துடன், பொலிஸ் துறையில் இவ்வருடமும் 2 ஆயிரம் வாய்ப்புகள் உள்ளன. தமிழ் இளைஞர்கள் பொலிஸ் சேவையில் இணைந்துகொள்வதற்கு முன்வரவேண்டும். தமிழ் இளைஞர்கள் பொலிஸ் சேவையில் அதிகளவில் இணைந்தால், மொழிப் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியும். அதுவரை மொழிபெயர்ப்பாளர்களை பணியில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

(அ-ம-125-26)

## வடக்கில்...

ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கின் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் காங்கேசன்துறை, மாங்குளம், பரந்தன் ஆகிய பகுதிகளில் கைத்தொழில் பேட்டைகளை நிறுவுவதற்கு உள்ளோம். இதற்காக புலம்பெயர் தேசத்தவர்களின் நிதிப் பங்களிப்பையும் கோருகின்றோம். அவர்கள் இலங்கையில் முதலிடுவதற்கு முன்வர வேண்டும்-என்றார். (அ-ம-26-125)

## திஸ்ஸ விகாரை...

மக்களின் காணிகளை ஆக்கிரமித்துச் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்ற வேண்டும் என்று நேற்று நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் வலியுறுத்தினார்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி அநுரவிடம் கஜேந்திரகுமார் எம்.பி. கேள்விகளை அடுக்கிக்கொண்டிருந்தபோதே, 'திஸ்ஸ விகாரை அகற்றப்படாது' என்று ஆளுநர் வேதநாயகன் தெரிவித்தார்.

மக்களின் காணிகளை ஆக்கிரமித்து விகாரை அமைக்கப்பட்டுள்ளது. ஆதலால், விகாரைக்குரிய காணிகளை மக்களுக்குப் பகிர்ந்துகொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் இருதரப்பு இணக்கப்பாடுகளையும் எட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம் என்று ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

இதற்கு, 'நாங்கள் மக்களுடன் நேரடித் தொடர்பில் உள்ளோம். மக்கள் எங்களிடம் அவ்வாறு எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. நீங்கள் மக்களிடன் இன்னும் செல்லவேண்டியுள்ளது' என்று கஜேந்திரகுமார் பதிலடி கொடுத்தார். (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலக அபிவிருத்திக்கு 100 மில்லியன் ரூபா!

யாழ்ப்பாணம், பெப். 1

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நூலகத்தின் பற்றாக்குறைகளை நீக்குவதற்காக 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண நூலகம் பெறுமதி வாய்ந்தது. அதேநேரம் யாழ்ப்பாண நூலகத்தை மாத்திரம் அபிவிருத்தி செய்தால் போதும் என்றல்ல.

எனவே, வடமாகாணத்தில் உள்ள பல்வேறு நூலகங்களில் அபிவிருத்திக்காகவும், கணினி வசதிகளை ஏற்படுத்தவும் 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும் என்றார். (ம-125)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கோண்டாவில் இராசபாதை வீதியில்
6 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு

* இராசபாதை வீதி முகப்புடன்
* இராசபாதை வீதி சந்தியிலிருந்து 1/2 km தூரம்
* திருநெல்வேலி சந்தை 2 km தூரம்
* யாழ்ப்பாணம் பேருந்து நிலையம் 5.5 km தூரம்
* செம்மண் தரை, நன்னீரூற்று
* 1 பரப்பின் விலை எண்பது லட்சம் (80 லட்சம்)
* இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
* நல்ல சூழல், வியாபார நிலையம் அமைப்பதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம் :**
காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை

**தொடர்பு: 070 290 2338**
**076 069 1105**

(CS/2414) A-1


வடமாகாணத்தில்

# 40,000 ஏக்கரில் தெங்கு விருத்தி

வடமாகாண மக்களின் பொருளாதாரத்தை வலுவூட்டும் வகையில் 40 ஆயிரம் ஏக்கரில் தெங்கு விருத்தி மேற்கொள்ளப்படும் ஜனாதிபதி அநுர தெரிவித்துள்ளார். அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாண மக்களின் பொருளாதாரம் நிச்சயமாக வளர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். இதனடிப்படையில் வடக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 40 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பொதுமக்களுக்கான தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டு தெங்கு விருத்தி இங்கு ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கென விசேட நிதியொதுக்கீடு மேற்கொள்ளப்படும்-என்றார். (ம-125-26)


## காணி விற்பனைக்கு

யாழ். சுண்டுக்குளி மோரிஸ் ஒழுங்கை, கொழும்புத் துறை வீதி அருகாமையில் 80m தூரமும் சுண்டுக்குளி பாடசாலை 500m தூரத்திலும் புதிதாக பிரிக்கப்பட்ட 1.4 பரப்பு (1ப - 7கு), 2.8 பரப்பும் (2ப - 14 கு) கொண்ட காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

- **UDA வீடு கட்டும் அனுமதி உண்டு.**
- **ஸ்ட்ரீட்லைன், உரிமை, கையளிக்கப்படாமைக்கான நற்சாட்சி சான்றிதழ்கள் உண்டு.**
- **சிறந்த சூழல்**
- **அகலமான 15 அடி - 20 அடி பாதை**
- **மின் இணைப்புக்கான அனுகல் உண்டு.**

**(தரகர் தேவையில்லை)**

**076 156 2983, 077 711 5438**

(CS/29451) J-1



நோர்வே ஒஸ்லோ திருவருள்மிகு
**ஸ்ரீ ஜெயதுர்க்கை அம்மன் ஆலயம்**
NORGES SAIVITE HINDU KULTUR SENTER
FB:sri jeya thurkai amman. Ads: Stálfære 20,0975 Oslo, NORWAY.
e-mail: thurkaiamman@gmail.com, Web: thurkaiamman.com.

**நோர்வே, ஒஸ்லோ ஸ்ரீ ஜெயதுர்க்கை அம்மன் ஆலயம்**
**ஆலய பிரதம குருக்கள் / சிவாச்சாரியாருக்கான**
**விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**
**பணியாற்றும் காலம் : 2025 AUG / 2026 AUG (ஒரு வருடம்)**

**தேவையான தகைமைகள்**

01. வயதெல்லை : (35 -50) இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
02. குருக்கள் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.
03. மஹோற்சவ குருக்களாக (சிவாச்சாரியார்) தொடர்ந்து 4 வருடங்கள் பிரபல்யமான ஆலயங்களில் பணியாற்றி இருத்தல் வேண்டும்.
04. குறைந்தது 6 வருடங்களாவது ஆலயங்களில் குருக்களாக பணியாற்றி இருத்தல் வேண்டும்.
05. மேலதிக தகைமைகள் இருப்பின்:
......................................................................
......................................................................
06. குருக்கள் பட்டதாரியாக இருப்பின் முன்னுரிமை வழங்கப்படும்.
07. சிறப்பு தகைமைகள் கவனத்தில் கொள்ளப்படும்.
08. சொற்பொழிவு, பிரசங்கம், பஜனை செய்யக் கூடியவராக இருத்தல் அவசியம்.
09. பிரசாதம் செய்தல், அன்னதானத்துக்கு உதவுதல் மிக அவசியம்.
10. அடியவர்களிடமும், நிர்வாகத்தினருடனும் சுமுகமான முறையில் கதைத்துக் கொள்ளுதல் மிக, மிக அவசியம்.

**வேதனம்:** நோர்வே வேதன முறைமைகளுக்கமைவானது.
விண்ணப்ப முடிவு திகதி : **31.03.2025**

Application must be sent to e-mail:
thurkaiamman@gmail.com
(விண்ணப்பத்தை மின்னஞ்சல் மூலமாக அனுப்பிவைத்தல் வேண்டும்.)

**நோர்வே சைவ இந்து கலாசார மன்றம்**

(cs.57363) (N-1)


# மரண அறிவித்தல்



தோற்றம் 30 • 11 • 1946

மறைவு 30 • 01 • 2025

## செல்வரத்தினம் பத்மாதேவி

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் பத்மாதேவி நேற்றுமுன்தினம் (30.01.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தமுத்து - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பசுபதி - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சந்திரேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், பகீரதன் (ரமேஷ் - லண்டன்), தர்மேஸ் (நோர்வே), நவீனா ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலைச்சலா (லண்டன்), துளசி (நோர்வே), ஜீவா (மருத்துவர்) ஆகியோரின் அன்பு மாமியும், சிவராசா, புஸ்பராசா, சுந்தரலிங்கம் (ரவி - லண்டன்), சந்திராதேவி, மல்லிகாதேவி, சிறிஸ்கந்தராசா (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயச்சந்திரன் - கீதாரஞ்சினி (லண்டன்), ஜெனார்த்தனன் - கஜந்தினி (பிரான்ஸ்), கமல்ராஜ் - கோவர்த்தனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், குணாநிதியின் (ஆசிரியை) அன்புப் பெரியம்மாவும், தாரணா, ஆரியன், ஆரண்யா, பவின், ஜெவின், லவண்யா அபினவ், ஜெனிசன், வினூஷன், மகிஷா, ஆரன், ஆரவி, ஆதிரன், அக்சரண் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளாவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 06, துல்மினிய ஒழுங்கை,**
**உடுவில் வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 282 5371**

(CS/67673) N-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org